பக்கங்கள்: பதினாறு

உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆடி 16 சனிக்கிழமை (01.08.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 248

வவுனியா முகாம்களிலிருந்து 40,000 பேர் யாழ்ப்பாணம் அழைத்து வரப்படுவர்

அவர்களை அமைச்சர் டக்ளஸ் உறவினர்களிடம் ஒப்படைப்பார்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 01

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியா முகாம்களில் தங்கியுள்ள, யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் நாற்பதினாயிரம் மக்கள் இங்குள்ள தமது உறவினர்களுடன் இணைக்கப்பட உள்ளனர்.

அவர்களை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் ஏ-9 வீதியூடாக அழைத்து வந்து அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைப்பார் என்று அமைச்சருக்கு நெருங்கிய வட்டாரங்கள் 'உதயனுக்கு' நேற்றிரவு தெரிவித்தன.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் 'வடக்கின் வசந்தம்' திட்டத்தின் தலைவருமான பஸில் ராஜபக்ஷ வவுனியா நலன்புரி நிலையத்தில் வைத்து அங்குள்ள மக்களை அமைச்சர் தேவானந்தாவிடம் ஒப்படைப்பார் என்றும் அந்த வட்டாரங்கள் கூறின. (16ஆம் பக்கம் பார்க்க)

தனியார் பஸ் கட்டணம் உயர்வு; 15 ஆம் திகதி அமுலுக்கு வரலாம்

கொழும்பு, ஓக. 1

பஸ் கட்டணங்களின் வருடாந்த மீளாய்வுக் கமைய இம்முறை நடைமுறையிலுள்ள கட்டணங்களை 5.3 வீதத்தால் அதிகரிக்க அனுமதியளிக்கலாம் என போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் அமல் குமாரகே தெரிவித்தார்.

டீசல் விலையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பை உத்தேசித்து பஸ் கட்டணங்களை 5.3 வீதத்தால் உயர்த்துவது தனக்கு நியாயபூர்வமாகத் தெரிகிறது. எனக் கூறிய

(16ஆம் பக்கம் பார்க்க)

தென்னாபிரிக்காவிலிருந்து வந்த தமிழ் இளைஞர் ஒருவர் கைது!

கொழும்பு, ஓக.01

ஐரோப்பிய நாட்டுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி தென் ஆபிரிக்காவில் கைவிடப்பட்டு இரண்டு வருடங்களுக்குப் பிறகு அங்கிருந்து நாடு கடத்தப்பட்ட 22 வயதுடைய வடபகுதி இளைஞர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்திறங்கிய போது கைதாகியுள்ளார். தேசிய புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் இவரைக் கைது செய்து நான்காவது மாடியில் தடுத்து வைத்துள்ளனர். கைது செய்யப்பட்டவரின் தாய் வாழ்க்கைத்தொழில்

(16ஆம் பக்கம் பார்க்க)

44.7 வீதமானோர் இன்னும் யாழ். தேர்தலில் வாக்களிப்பது குறித்து தீர்மானிக்கவில்லை

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் வெளியிட்ட கருத்துக் கணிப்பில் தகவல்

யாழ்ப்பாணம், ஓக.1

யாழ். மாநகர சபைத் தேர்தலில் எந்தக் கட்சிக்கு வாக்களிப்பது என்று சுமார் 44.7 வீதமான வாக்காளர்கள் இன்னமும் தீர்மானிக்கவில்லை என்று தெரியவருகிறது.

இத்தேர்தல் தொடர்பாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும் மனித உரிமைகளுக்கான இல்லமும் மாதிரி தேர்தல் கணிப்பீடு ஒன்றை கடந்த 22, 23, 24 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் மேற்கொண்டன.

நேற்றுவெளியிடப்பட்டகணிப்பீட்டுஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய புள்ளி விவரங்களுடனான தரவுகளில் ஒன்றாகவே 44.7 வீதமான வாக்காளர்கள் எந்தக் கட்சிக்கு வாக்களிப்பது என்று இன்னமும் தீர்மானிக்கவில்லை எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. 22.3 வீதமானோர் இது குறித்து கருத்துக்கூற மறுத்து விட்டனர்.

அத்துடன் பொதுவாக யாழ். மாநகர சபை வாக்காளர்களில் 42.9 சதவீதமானோருக்கு இலங்கை அரசியலில் ஈடுபாடு இல்லையெனவும், 13.4 சதவீதமானோருக்கு இலங்கை அரசியலில் தீவிர ஈடுபாடு உள்ளது எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அரசு ஒருபோதும் இணங்கவேயில்லை

அது வெறும் கட்டுக்கதை என்கிறார் அமைச்சர்

கொழும்பு, ஓக.1

"சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடனைப் பெறுவதற்காக அரசு நிப்ந்தனைகள் எவற்றுக்கும் அடிபணிந்து இணங்கவில்லை. அரசுக்கும் நாணய நிதியத்திற்கு மிடையிலான பொது உடன்பாட்டின் கீழ் தான் கடன் வழங்கப்பட்டது என்பது முற்றிலும் பொய்."

- இவ்வாறு ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா நேற்று அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து நாம் கடன்பெறுவது முதல் தடவையல்ல. பல வருடங்களாக பல தடவைகள் கடனைப் பெற்றுள்ளோம். இதைச் சிலர் மோசமாக விமர்சிக்கின்றனர்.

நாட்டுக்குப் பாதகமான பல நிபந்தனைகளுக்கு உடன்பட்டே நாம் இந்தக் கடனைப் பெற்றோம் என்று கூறுகின்றனர். நாம் எந்தவித நிபந்தனைகளுக்கும்

(16ஆம் பக்கம் பார்க்க)

நாணய நிதியம் கடன் கொடுக்கத் தவறியிருந்தால் நட்பு நாடுகள் இலங்கைக்கு உதவியிருக்கும்

ஒரு தொலைபேசி அழைப்பே போதும் என்கிறார் இந்தியப் பிரதிநிதி

கொழும்பு, ஓக. 1

சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவிகள் ஒருவேளை இலங்கைக்கு கிடைக்காமல் விட்டிருந்தால் நட்பு நாடுகளின் நிதியுதவிகள் இலங்கைக்கு நிச்சயம் கிடைக்கப்பெற்றிருக்கும் என்று இந்தியா தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தில் இந்தியாவின் பிரதிநிதியாகக் கடமையாற்றும் அடம்ஸ் கிஷோர், இதனைத் தெரிவித்தார்.

அவர் கொழும்பில் இடம்பெற்ற மாநாடு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:- (16ஆம் பக்கம் பார்க்க)

Cosy Hotel & Restaurant

தம் புரியாணி, நூடில்ஸ், (f)பிறைட்ரைஸ், ஸ்பெஷல் நான், பூரி, சூப் மற்றும் சைனிஸ், இந்தியன் ஸ்பெஷல் உணவு, கறி வகைகள்

Open 11.00 am to 11.00 pm

இல: 25, புகையிரத நிலைய வீதி, வெள்ளவத்தை. CALL: 0112504020

இல:15, சிறாம்பியடி லேன், யாழ்ப்பாணம். CALL: 021-2225899

கொசி உணவகம் Feel at home

யாழ் நகரிலும் கொழும்பிலும் நீண்ட காலமாக சுவையான, தரமான Indian, Chinees உணவு வகைகளுடன்

AC Non AC Rooms Available

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA, SRILANKA
FACULTY OF MEDICINE
Date of Commencement of Academic Programme for the New Batch 32nd (2009) Batch

The Academic Programme for the New Batch 32nd (2009) will commence on 17 th August 2009

Registrar
29.07.2009 (C/55998)

ஆத்ம அஞ்சலி

திருமதி சாந்தகுமாரி விக்னராசா

அன்னாரின் பிரிவுத்துயரில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதிபர்,
அண்ணா தொழிலகம்.

இணுவில். (D)

மரண அறிவித்தல்கள்

கணபதிப்பிள்ளை இலட்சுமிப்பிள்ளை

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், நாயன்மார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இலட்சுமிப்பிள்ளை (30.07.2009) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், மகாத்மராசா, பத்மினி, கிரோகினி, கமலினி (வவுனியா), மாலினி (வவுனியா), அன்பினி (பொறியியலாளர், கண்டி), தருமராசா (டோகா), ஆகியோரின் அன்புத் தாயாரும், சந்திரலேகா, அன்ரன் பிரான்சிஸ் (வவுனியா), சுவாமிநாதர் (வவுனியா), தர்சினி ஆகியோரின் மாமியாரும், தர்சிகா, சகானா, கபின், துளசி, அபிராமி, ஆகாஸ், அசோக்பிரவின், சாதுரிகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.08.2009) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2 மணிக்கு செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

24, அம்பாள் வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம். (560105)

தகவல்:
க.மகாத்மராசா
(மகன்).

ஐயாத்துரை யோகேஸ்வரன்

தாவடியைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த ஐயாத்துரை யோகேஸ்வரன் கடந்த 29.07.2009 புதன்கிழமை கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - பூரணம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம்-புவனேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும், பிறேமகுமாரியின் அன்புக் கணவரும் , அபிராமி, கீதன், நிதர்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகநாதன் (தாவடி), சண்முகராசா (ஜேர்மனி), பற்குணநாதன் (சுவிஸ்), ரவீந்திரன் (சுவிஸ்), நாகேஸ்வரி (கனடா), புவனேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.08.2009) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாடசாலை வீதி ,
தாவடி தெற்கு,
கொக்குவில். (E)

தகவல்:
ஐயாத்துரை சண்முகநாதன்
(சகோதரர்).

வங்கியின் ஆண்டு விழா; குருதிக் கொடையும் ஆண்டுவிழாவும்

அச்சுவேலி, ஓக. 1

இலங்கை வங்கியின் எழுபதாவது ஆண்டு நிறைவையும் அச்சுவேலி இலங்கை வங்கிக் கிளையின் கலைமதி எழுச்சிக் கிராமத்தின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டும் இன்று சனிக் கிழமை முற்பகல் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் சிரமதான நிகழ்வும் மாலை கலைமதி மக்கள் மண்டபத்தில் குருதிக்கொடை வழங்கல் நிகழ்வும் நடைபெறும்.

நிகழ்வுகளில் இலங்கை வங்கி வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் என். சிவரட்ணம் வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் ஆர்.ஜெயயேந்திரா மற்றும் வங்கி உயர் அதிகாரிகள் விருந்தினர்களாக கலந்து கொள்கின்றனர். (அ-11)

கருத்தரங்கு

சிறுவணிக முகாமைத்துவக் கற்கை நெறிக்கான கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி தொடக்கம் பி.ப. 12.30 மணி வரை இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறும் என இணைப்பாளர் அறிவித்துள்ளார். (201)

தேவை

தொலைத்தொடர்பு நிலையங்களில் பணியாற்றிய அனுபவமுள்ள தமிழ், ஆங்கிலம் மற்றும் கணணி அறிவுடைய இருபாலரும் தேவை. மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. 610,கே.கே.எஸ். வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 02.08.2009 மு.ப.10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை நேரில் சமுகம்தரவும்.

தொடர்புகளுக்கு- 021 222 8416 (87488)

உடன் விற்பனைக்கு

1 மாதம் மட்டும் பாவித்த Servo Bag Closer (உரப்பை தைக்கும் மெசின்) விற்பனைக்கு உண்டு. அரிசி ஆலைக்கு உகந்தது.

தொலைபேசி இல:-0773126452
மான் பாட்சாலை வீதி,உடுவில்,சுன்னாகம் (87485)

UNIVERSITY OF JAFFNA, SRILANKA
FACULTY OF MEDICINE
Allied Health Sciences
Date of Commencement of Academic Programme for the New Batch 4th (2009) Batch

The Academic Programme for the New Batch 4 th (2009) **Allied Health Sciences** (Bachelor of Science in Nursing, Bachelor of Science in Medical Laboratory Sciences and Bachelor of Pharmacy) will commence on 14 th September 2009.

Registrar
29.07.2009 (55999)

வசந்தோதயம் இசைநிகழ்ச்சி இன்று துரையப்பா அரங்கில்

யாழ்ப்பாணம், ஓக. 1

பிரபல தென்னிந்திய பாடக, பாடகிகள் பங்கேற்கும் வசந்தோதயம் இசை நிகழ்வு இன்று மாலை 6 மணி முதல் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வை ஒட்டி ஊரடங்கு நீக்கப்படுவதுடன் போக்குவரத்துச் சபையின் விசேட பஸ் சேவைகளும் இடம்பெறும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

வசந்தம் தொலைக்காட்சி, ஐ.ரி.என். ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெறுகிறது. (1)

சேவை நலன் பாராட்டும் பிறந்தநாள் வாழ்த்துகளும்

பொன்னுத்துரை பாலசிங்கம்

மக்கள் மனதில் என்றென்றும் நினைவில் உள்ள இலங்கை வங்கியில் முப்பத்தி நான்கு வருடங்கள் சிறப்புடன் கடமையாற்றி கௌரவத்துடன் வங்கிச் சேவையை நிறைவு செய்து வாடிக்கையாளர்களின் நற்பெயருடன் கௌரவமாக வங்கிச் சேவையை முன் கூட்டியே நிறைவு செய்ய எண்ணி நேற்றுடன் (31.07.2009) ஓய்வு பெற்று இன்று (01.08.2009) தனது பிறந்தநாளை கொண்டாடும் எங் கள் நண்பன் பாலாவை என்றென்றும் சிரித்த முகத்துடன் குடும் பத்தினருடன் சிறப்புற வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த் தித்து மனதார வாழ்த்துகின்றோம்.

நா.சிவராசா (பொன்னாலை),
ப.சிவசுப்பிரமணியம் (இளவாலை),
நண்பர்கள்.

(C/56[illegible]104)

லண்டனில் உயர்கல்வி பயில்வதற்கு ஓர் அரிய வாய்ப்பு

* "A" தர பல்கலைக்கழகங்களில், கல்லூரிகளில் விரும்பிய கற்கை நெறிகளுக்கு அனுமதி.
* குறைந்த கட்டணச் சலுகைகள், U.K யில் சகல வசதிகளும்.
* தினமும் காலை 8 மணியிலிருந்து 5 மணி வரை நேரில் சந்திக்க ஏற்பாடு. சந்தித்தவர்கள் விவரங்களுடன் நேரில் வரவும்.

தொடர்பு : 021 222 3818
எந்நேரமும் தொடர்பு : 0774528818
E.Mail : mg1404_2009@yahoo.com
148,கோயில் வீதி, யாழ்ப்பாணம் (யுனிசெவ் முன்பாக). (அ-560101)

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமக

யாழ். மாவட்ட பொற்றொழிலாளர் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம்

காலம் -02.08.2009 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணி
இடம்- யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை

அனைத்து பொற்றொழிலாளர்களும் தவறாது சமுகமளிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

யாழ். மாவட்ட பொற்றொழிலாளர் சங்கம். (87486)

யாழ்/இந்து மகளிர்கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் - 2009

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 2009.08.09 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கல்லூரி விசாலாட்சி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இப்பொதுக் கூட்டத்தில் பெற்றோர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

செயலாளர் அதிபர்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம் (87479)

யாழ்.மாநகரசபைத் தேர்தல் 08.08.2009

நீங்கள் அளிக்கும்
ஒவ்வொரு வாக்கும்
உங்கள் உறவுகளுக்காக
கைகொடுக்கும்
என்பது நிச்சயம்.
உங்கள் பலமே எனது பலம்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

திரு.R.இரத்தினேஸ்வரன்
பிள்ளையார் இன்,
பிள்ளையார் ஸ்ரோர்ஸ்.

(C-560106)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

பணியாற்ற வேண்டிய சமயத்தில் பணி நீங்கும் சமாதானச் செயலகம்

ஒரு கட்டமைப்பு எப்போது இயங்கத் தொடங்க வேண்டுமோ அச்சமயத்தில்தான் அதற்கு மூடுவிழா நடத்தப்படுகின்றது. அந்த அதிசயம் - அல்லது விபரீதம் - இலங்கைத் தீவில்தான் அரங்கேறுகின்றது.

'சமாதான நடவடிக்கைகளைக் கூட்டிணைப்பதற்கான அரசின் செயலகம்' தனது ஏழாண்டு காலப் பணியை முடித்துக்கொண்டு நேற்றுடன் கண்மூடிவிட்டது.

2001 டிசெம்பர் 5 ஆம் திகதி இடம்பெற்ற பொதுத் தேர்தலில் வெற்றியீட்டிய - ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான - ஐக்கிய தேசியக் கட்சி அரசு, விடுதலைப் புலிகளுடன் யுத்தநிறுத்தம் செய்து, அமைதி முயற்சிகளை ஆரம்பித்தது. அப்போது - 2002 ஆம் ஆண்டு முற்பகுதியில் - சமாதான முயற்சிகளைக் கூட்டிணைப்பதற்கென இந்தச் செயலகம் அப்போதைய அரசினால் ஸ்தாபிக்கப்பட்டது.

ரணிலின் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற ஆறு சுற்று அமைதிப் பேச்சுகளின் போதும் இந்த சமாதானச் செயலகம் குறிப்பிடத்தக்க பணியாற்றியது என்பது விதந்துரைக்கத்தக்கது.

திடீரென ரணிலின் அரசை நான்கு ஆண்டுகள் முற்கூட்டியே கலைத்து, ரணில் அரசு ஆரம்பித்த அமைதி முயற்சிகளுக்கு வேட்டுவைத்த ஜனாதிபதி சந்திரிகா, அதைத் தொடர்ந்து நடைபெற்ற பொதுத் தேர்தலில் வெற்றியீட்டி புதிய அரசை அமைத்தபோதும் இந்த சமாதானச் செயலகம் பெயரளவிலேனும் இயங்க அனுமதித்தார். அச்சமயத்தில் அமைதி எத்தனம் அடியோடு ஸ்தம்பித்துப் போயிருந்ததால் இச் செயலகத்தின் பணி முனைப்புப் பெறவில்லை.

பின்னர் 2005 நவம்பரில் புதிய நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் இந்த செயலகத்தின் அதிகாரத் தலைமைத்துவத்தில் அதிரடி மாற்றங்கள் செய்யப்பட்டன.

அப்போது முதல் நேற்றுவரை சுமார் மூன்றரை ஆண்டுகளுக்கும் அதிகமான காலம் இந்தச் செயலகத்தின் பணி வித்தியாசமாக அமைந்தது.

ஆரம்பத்தில் - 2006 செப்டெம்பர் வரை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஜெனிவாவில் இரண்டு சுற்றுப் பேச்சுகள் நடைபெற்ற வேளையில் - அமைதி முயற்சிகளில் இந்தச் செயலகத்தின் பங்கு, பணி கணிசமாக இருந்தமை வெளிப்படை.

ஆனால், அந்தப் பேச்சுகள் தோல்வியில் முடிவடைந்து, யுத்தம் வெடித்தபோது 'அமைதி முயற்சிகளைக் கூட்டிணைப்பதற்கான அரச செயலகம்' அந்தப் பெயரை வைத்துக்கொண்டே போர்ப் பிரசாரச் செயலகமாகத் தன்னை மாற்றிக்கொள்ளும் வினோதம் இங்கு அரங்கேறியது.

இலங்கையின் வரலாற்றில் பெரும் மனிதப் பேரவலங்களையும், அழிவுகளையும், கொடூர நாசங்களையும் ஏற்படுத்தி, பல்லாயிரக்கணக்கான மனித உயிர்களைக் காவுகொண்ட கோர யுத்தம் கட்டவிழ்ந்தது இந்தக் காலப் பகுதியில்தான். ஆனால் அத்தகைய யுத்தத்தைத் தொடுத்த அரசோ, அந்த இராணுவச் செயற்பாட்டை 'தமிழ் மக்களை மீட்பதற்கான மனிதாபிமான நடவடிக்கை' எனப் பெயரிட்டுக் கொண்டது. அதேபோல 'சமாதானச் செயற்பாடுகளைக் கூட்டிணைப்பதற்கான அரச செயலகமும்', சமாதான எத்தனங்கள் தோற்றுப்போய், யுத்தம் வெடித்த அச்சமயத்தில் அந்த யுத்த நடவடிக்கைகளை உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் நியாயப்படுத்திப் பிரசாரப்படுத்துவதே தனது 'சமாதானப் பணி' என்று அர்த்தப்படுத்திக்கொண்டு, அந்த வேலையில் முழு அர்ப்பணிப்புடன் ஈடுபட்டது.

1995 முதல் 2001 இறுதிவரை பல்வேறு முனைகளில் விடுதலைப் புலிகளுடன் போர் நடத்திய சந்திரிகா அரசும் அந்த நடவடிக்கையை 'சமாதானத்துக்கான போர்' என்று விநோதமான விளக்கங்களுடன் வியாக்கியானம் செய்து நியாயப்படுத்தி வந்தமை மறக்கற்பாலதல்ல.

அதுபோன்று, இந்த சமாதானச் செயலகமும் 2006 ஆம் ஆண்டு இறுதி முதல் கடந்த மே நடுப்பகுதி வரை இத் தேசத்தில் இடம்பெற்ற கொடூர உள்நாட்டு யுத்தத்தை சமாதான நடவடிக்கையாக அர்த்தம் பண்ணுவதில் அரும்பணியாற்றியது.

இப்போது விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டு, யுத்தத்தில் இறுதி வெற்றி ஈட்டியாகி விட்டது என அரசே உத்தியோகபூர்வமாக அறிவித்தாயிற்று.

அந்தப் பிரகடனம் வெளியாகி இரண்டு மாத காலத்துக்குள் - நேற்றுடன் - அரச சமாதான செயலகத்துக்கும் 'வெற்றிகரமாக' மூடுவிழா நடத்தி முடிக்கப்பட்டுவிட்டது.

உண்மையில் இப்போதுதான் - இனித்தான் - இத்தகைய சமாதானச் செயலகத்துக்கு - வெளிப்படையாக அதன் பெயரில் குறிப்பிடப்பட்டுள்ள சமாதானப் பணியைக் காத்திரமாக ஆற்றுவதற்குரிய - சந்தர்ப்பமும் காலமும் வாய்த்து வந்திருக்கின்றது எனலாம். ஆனால் அச்சமயத்தில்தான் அந்த அலுவலகத்துக்கு இங்கு இறுதிக்கிரியைகள் நடந்திருக்கின்றன.

யுத்தத்தினால் சிதைவுற்று அழிந்த பிரதேசங்களைப் புனரமைத்து மக்களை மீள்குடியமர்த்துவது மட்டுமல்லாமல், அந்தப் போரழிவினால் சிதைவுற்ற மனித மனங்களை சீரமைத்து, நெறிப்படுத்த வேண்டிய பெரும் பணியும் காத்திருக்கின்றது. அரசுதான் கொண்டாடும் யுத்த வெற்றியை அது தனக்கு வாய்ப்பானதாக - நிலைத்திருக்கத்தக்கதாக - ஸ்திரப்படுத்த வேண்டுமானால், அந்தச் செயற்பாட்டின் அத்திவாரத்தில், நின்று, நிலைத்து, நீடிக்கக்கூடிய சமாதானத்துக்கான நல்லிணக்கப்பாடு எட்டப்பட்டு, அது முழு அளவில் நடைமுறைப்படுத்தப்பட்டு கட்டியெழுப்பப்படவும் வேண்டும்.

அத்தகைய சமாதான எத்தனத்தைப் பற்றுறுதியோடும், திடசங்கற்பத்தோடும் விரைந்தும், உறுதியாகவும் முன்னெடுக்க வேண்டிய இந்த வரலாற்றுச் சந்தர்ப்ப வேளையில், அத்தகைய சமாதான நடவடிக்கைகளைக் கூட்டிணைக்கும் பொறுப்பையே தனது பெயராகவும் நோக்கமாகவும் கொண்ட கட்டமைப்புக்கு சாவுமணி அடிப்பது விநோதமானது; விபரீதமானது.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைச் சிக்கல் தொடர்பான விவகாரத்தை ஒட்டி சிறுபான்மையினரான தமிழர்களுக்கு நீதி, நியாயமான தீர்வை வழங்கும் விடயத்தில் அரசின் அந்தரங்கக் கருத்து நிலைப்பாட்டை இந்த நடவடிக்கை சந்தேகத்துக்கு உள்ளாக்கும் என்பதும் மறுக்கப்படக் கூடியதல்ல.

கடந்த ஆண்டு கற்றலை நிறைவு செய்த கலைப்பீட மாணவருக்கு நிலைப் பெறுபேற்று அறிக்கை இதுவரை வழங்கப்படவில்லை

இதனால் அவர்கள் வேலை வாய்ப்புக்களைப் பெறமுடியாத நிலை

யாழ்ப்பாணம், ஓக. 1

கற்றல் நடவடிக்கையை நிறைவு செய்து மாதங்கள் பல கடந்துவிட்ட நிலையிலும், தமக்குரிய நிலைப் பெறுபேற்று அறிக்கையினை வழங்குவதில் பல்கலைக்கழக நிர்வாகம் அசமந்தப் போக்கைக் கடைப்பிடிப்பதாகப் பாதிக்கப்பட்ட கலைப்பீட மாணவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட மாணவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

பல்கலைக்கழக கற்கநெறியினைப் பூர்த்திசெய்த மாணவர்கள் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கு நிலைப் பெறுபேற்று அறிக்கை மிக அத்தியாவசியமானது. எனினும் மாணவர்களின் எதிர்கால நலனை உணராத வகையில் அதனை உரிய காலப்பகுதியில் மாணவர்களுக்கு வழங்காது பல்கலைக் கழக நிர்வாகம் இழுத்தடித்து வருகின்றது.

நிலைப் பெறுபேற்று அறிக்கையினை விரைவாகத் தந்துதவுமாறு சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு எழுத்து மூலமாகவும், நேரடியாகவும் பலமுறை கோரிக்கை விடுத்த போதும் இது தொடர்பாக எதுவித ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே மாணவர் நலனை கருத்திற் கொண்டு நிலைப்பெறுபேற்று அறிக்கையை மாணவர்களுக்கு விரைந்து வழங்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்ட மாணவர்கள் சார்பில் வேண்டுகின்றோம் - என்றுள்ளது. (50)

வடக்கில் சுதந்திரமான தேர்தல் நடக்கும் சூழல் தற்போது உதயம்

அமைச்சர் டலஸ் கூறுகிறார்

கொழும்பு, ஓக. 1

வடக்கில் ஜனநாயகத் தேர்தலொன்றை நடத்த முடியாது என சில சக்திகள் மேற்கொண்ட பிரசாரங்களை அரசு முறியடித்துள்ளது. வடக்கு மக்கள் தாம் விரும்பும் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யும் பூரண சுதந்திரம் இன்று வழங்கப்பட்டுள்ளது. இதற்கான சூழல் இன்று உதயமாகியுள்ளது என்று போக்குவரத்து அமைச்சர் டலஸ் அழகப்பெரும வவுனியாவில் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இங்கு அமைச்சர் தொடர்ந்தும் தெரிவித்தவை வருமாறு :-

இதற்கு முன்னர் வடபகுதி மக்கள் தமது கருத்தை வெளியிடும் சுதந்திரம் அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டிருந்தது. இன்று அந்த நிலை முற்றாக மாற்றப்பட்டு எதிர்வரும் 8 ஆம் திகதி ஜனநாயகத் தேர்தல் நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சிறு சம்பவங்களைத் தவிர வடக்கில் தேர்தல் வன்முறைகள் எதுவும் நடைபெறவில்லை எனத் தேர்தல் கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

வடக்கில் இடம்பெயர்ந்த மக்களைச் சொந்த இடங்களில் மீள் குடியேற்றும் பணிகள் வெகு துரிதமாக நடைபெற்றுவருகின்றன. புலிகளால் புதைக்கப்பட்டுள்ள பெருந்தொகையான நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவது இலேசான காரியமல்ல - என்றார். (சி)

தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக.1

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் மாவட்ட அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் சகல தொண்டர் ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது. (204)

யேசு சபைக் குடும்ப முன்பள்ளி திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஓக. 1

''கரித்தாஸ்- கியூடெக்'' நிறுவனத்தின் ஏற்பாட்டில் வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பகுதியில் அமைக்கப்பட்ட யேசுசபை குடும்ப முன்பள்ளியின் திறப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.ஆயர் அதிவண.தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக கரித்தாஸ் - கியூடெக் நிறுவன இயக்குநர் சி.ஜெயக்குமார், வடமராட்கிழக்கு அரசாங்க அதிபர் எம்.சிறீஸ்கந்தகுமார், இலங்கை இராணுவத்தின் பொற்பதிப் பிரதேச கட்டளை அதிகாரி எச்.எச்.பி.சி.ஹல்பகே, அமெரிக்க இலங்கைத் திருச்சபையின் மாகாணத் தலைவர் ஏ.ஜெயக்குமாரன் ஆகியோர் கலந்துகொள்வர்.

யேசு சபைகுடும்ப முன்பள்ளிக் கட்டடம் 15 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளதுடன் ஒரு லட்சம் ரூபா செலவில் தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (201)

திருமலையில் தனியாருக்கு காணி ஒதுக்கீடு; மாகாண சபையில் அதனை எதிர்த்துத் தீர்மானம்

அரசின் நடவடிக்கைக்கு உறுப்பினர்கள் இனப் பாகுபாடின்றி கண்டனம்

கொழும்பு, ஓக 1

கிழக்கு மாகாணசபையுடன் ஆலோசனை செய்யாமல் இரண்டு தனியார் நிறுவனங்களுக்கு திருகோணமலை மாவட்டத்தில் மத்திய அரசு 35 ஆயிரம் ஏக்கர் நிலத்தை வழங்க எடுத்துள்ள நடவடிக்கை தொடர்பாக கிழக்கு மாகாண சபைக்கும் மத்திய அரசுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டிருப்பது தெரியவந்துள்ளது.

இந்த இரண்டு திட்டங்களையும் கிழக்கு மாகாண அரசு இரத்து செய்துவிட்டதாகவும் கூறப்படுகின்றது. இதனால் அரசமைப்புச் சட்டப்பிரச்சினை ஒன்று கிளம்பியுள்ளதாக கூறப்படுகின்றது. அரச காணிகளை வெளியாருக்கு வழங்குவது தொடர்பான 13ஆவது அரசமைப்புத் திருத்தம் இதில் சம்பந்தப்படுவதாக விடயம் அறிந்தவர்கள் கூறுகிறார்கள்.

இந்தத் திட்டம் எவ்வாறாயினும் நிறைவேற்றப்படும் என்று தேசக் கட்டுமான அமைச்சர் சுசந்த புஞ்சி நிலமே தெரிவித்திருக்கிறார்.

இந்த இரண்டு திட்டங்களில் ஒன்றினை கந்தளாய்ப் பகுதியில் வாழைத்தோட்டம் அமைப்பதற்காகவே 15 ஆயிரம் ஏக்கர் நிலத்தை தனியார் நிறுவனத்துக்கு வழங்குவதற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியிருக்கிறது. இரண்டாவது திட்டத்தின் படி அதே நிறுவனத்திற்கு மர முந்திரிகைத் தோட்டம் அமைப்பதற்கென 20 ஆயிரம் ஏக்கர் நிலத்தை வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் கட்டுப்பாட்டிலுள்ள மாகாண சபையின் பிரதித் தலைவர் எம். கே. டி.எஸ். குணவர்த்தன இது பற்றி குறிப்பிடுகையில், அமைச்சரவை அந்தஸ்தில்லாத அமைச்சர் ஒருவரின் ஆதரவாளர்களான ஒரு குழுவினர் கந்தளாய் பகுதியில் மரங்களைத் தறிக்க ஆரம்பித்திருப்பதாகவும் மிருகங்களை வேட்டையாடுவதிலும் அப்பகுதியில் உள்ள பெறுமதியான திரவியங்களை சூறையாடுவதிலும் இறங்கியிருப்பதாகவும் கூறினார்.

இந்த நிலைமை காரணமாகவே மாகாணசபை தலையிட நேர்ந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

கடந்த ஏப்ரல் மாதம் அமைச்சரவைப் பத்திரம் ஒன்று அகீகரிக்கப்பட்டதுடன் மாகாண சபையில் கலந்துகொள்ளாமலே இக் காணிகள் தனியாருக்கு வழங்கப்படு வதற்கு முடிவெடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். இந்தத் திட்டத்துக்கான இறுதி முடிவு கடந்த மாதம் அமைச்சரவையால் எடுக்கப்பட்டது என்றும் அவர் கூறினார்.

கடந்த புதன்கிழமை மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தில் இந்த மாகாணத்திலுள்ள நிலங்கள் எதுவும் சபையுடன் ஆலோசனை செய்யாமல் மத்திய அரசினால் பங்கீடு செய்ய முடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தனி உறுப்பினர் தீர்மானம் சபையில் கே.ரி. தேவாரப் பெருமாவினால் முன்மொழியப்பட்டு டி.எஸ்.குணவர்த்தனவால் வழிமொழியப்பட்டது.

முதலமைச்சர் கருத்து

இந்தத் தீர்மானத்தின் மீது முதல் அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) பேசும்போது, தனியார் நிறுவனங்களுக்கு அரச காணிகளை மாகாணசபையுடன் கலந்தாலோசிக்காமல் மத்திய அரசால் வழங்கப்படுவது தொடர்பாக உறுதியான முடிவு ஒன்று எடுக்கப் பட வேண்டும் என்று கூறினார். கிழக்கு மாகாணத்தில் உள்ள அரச காணிகளை தனியாருக்கு வழங்குவதானது இப்பகுதி மக்களின் மனங்களைப் பாதிப்பதாக இருக்கும் என்றார் அவர்.

அமைச்சரவையால் இத்திட்டம் அங்கீகரிக்கப்பட்டுவிட்டதால் அதனை தாங்கள் முன்னெடுத்துச் செல்ல தீர்மானித்திருப்பதாக அமைச்சர் புஞ்சி நிலமே தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தை நிராகரித்து இரத்துச் செய்யப் போவதாக மாகாணசபையினர் தெரிவித்துள்ள அதேசமயம், மாகாண சபையின் தீர்மானத்தை மத்திய அரசு தனது மேலதிகாரத்தைப் பயன்படுத்தி இரத்துச் செய்ய முடியும் என்று கூறப்படுகின்றது. (ப)

நாளை

ஆடி 17	02.08.2009 ஞாயிற்றுக்கிழமை
திதி:	துவாதசி பி.இ. 12.53 வரை
நட்சத்திரம்:	மூலம் மறுநாள் காலை 6.33 வரை
சுபநேரம்:	09.03 - 10.33
ராகுகாலம்:	04.33 - 06.03

மீள் எழுச்சித்திட்ட அறிமுக விழா

உடுப்பிட்டி, ஓக.1

- கரவெட்டிப் பிரதேசத்துக்கான மீள் எழுச்சித்திட்ட அறிமுக நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கரணவாய் கிழக்கு உச்சில் அம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.பிரதித் திட்டப் பணிப்பாளர் வே.விசுவலிங்கம், கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன், பிரதேச செயலக அதிகாரிகள், உள்ளூர் திணைக்களங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொள்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் கந்தன் திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்

★ இந்தியன், பத்தம் புதிய டிசைன் சாரிகள், சல்வார், பஞ் சாபி வகைகள் குறைந்த விலை யில் கொடுக்க நாங்கள் ரெடி! வாங்க நீங்கள் ரெடியா?

அன்புடன்

தொடர்பு: ரோஜமுருகன் தொ.பே:0771744566

COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250

ஒருவாரகால முழுநேரகற்கைநெறிகள்.

Diploma in Graphic Designing
சர்வதேச ரீதியில் முன்னணியிலுள்ள டிஜிரிபாருடகளான
Adobe Photo shop+Corel Draw
Macro Media Flash+Cool 3D Studio

Diploma in Hardware Engineering
Assembling+Upgrading+Troubleshooting+Repairing
Servicing+Software Installation+Config Networking Ect.

Diploma in Video Editing
சர்வதேச ரீதியில் முன்னணியிலுள்ள டிஜிரிபாருடகளான
Adobe Photoshop+Cool 3D Studio+VCD cutter
Capturing+Pinnacle Studio+Adobe premeir

ஆங்கிலவழிமூலமாக கற்பிக்கப்படும்

வகுப்புக்கள் ஆரம்பம்:- 03.08.2009

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
சத்திய மூர்த்தி அம்பிகை
திதி : ஏகாதசி

பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த கோயிலே
பாசத்துடன் வளர்த்தாய் பாரிலே;அன்பின் சிகரமாய்
பண்பின் உறைவிடமாய், பாசத்தின் இலக்கணமாய்
இருந்து எம்மை எல்லாம் வழிநடத்திய கோயிலே இன்று
எம்மை இங்கு தவிக்கவிட்டு நீங்கள் எங்கு சென்றீர்கள் அம்மா
மறைந்த செய்தி இன்னும் கனவாய் உள்ளது
கவலையும் தாங்க முடியாத உங்கள் பிரிவு; நிஜமாக எப்படி
தாங்குவோம் தாயே! என்றும் எங்களைப் பெற்ற கோயிலே
உங்களின் நினைவுகளுடன் ஊசலாடுகின்றோம் தாயே

12.08.2008 அன்று இறைபதம் அடைந்த எமது தாயின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வு இன்று (01.08.2009) சனிக் கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்தி நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

என்றும் நினைவுடன்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

திருமதி. நவமணிதேவி துரைராசா
சத்தியகிரி, பண்ணாகம், சுழிபுரம். (87481)

தேவை

கிழமை நாள்களில் தரம் 3க்கு எல்லாப் பாடங்களும் கற்பிக்கக் கூடிய ஆசிரியர் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு -Siva Institute
இல.616,மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம்

நிறுவனங்களின் தேவைக்கு

நெல்லியடி பிரதான வீதியில் இருந்து மிக அண்மையாக அரச சார்பற்ற நிறுவனங்களின் தேவைக்கு வெற்றுக்காணி உண்டு. தேவையாயின் கட்டடம் அமைத்துக் கொடுக்கப்படும்.

தொடர்புக்கு - 0777049364

தவறிவிட்டது

சுதுமலை தெற்கு, சாவற்கட்டு என்னும் முகவரியுடைய மதிமுகராசா முத்துக்கிளிஎன்பவரது தே. அ. அட்டையும் (765044421V) ஒரு தொகை பணமும் அடங்கிய பை குறிகட்டு வானுக்கும் யாழ்ப் பாணத்திற்கும் இடையில் கடந்த (25.07.2009) அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்துடனோ அல்லது 0774013949 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தெரிவுப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஓக. 1

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தில் மென்பொருள் எந்திரவியல் இளமாணிப்பட்ட கற்கை நெறிக்கான தெரிவுப் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு மேற்படி நிலையத்தில் நடைபெறவுள்ளதாக பிராந்திய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (201)

அறிவுறுத்தல் கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 01

தீவகம், தென்மராட்சி, யாழ்ப்பாணம் (கோப்பாய் கோட்டம் தவிர்ந்த) வலயத்தில் ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சை அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் எதிர்வரும் நாலாம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் பரீட்சை அலுவலர்களை கலந்துகொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (1)

சிங்கள கற்கை நெறி

யாழ்ப்பாணம்,ஓக 1

தேசிய இளைஞர் சேவை மன்றத்துக் குட்பட்ட இணுவில் கிழக்கு இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் சிங்களம் பிரிவு I,II ஐந்து மாதகால கற்கை நெறி நடைபெற்று வருகின்றது.

மேற்படி கற்கை நெறியின் தொடர்ச்சியாக சிங்களம் பிரிவு II வகுப்புகள் இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. (201)

விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஓக. 1

யாழ். பாலர் கல்விக்கழக நிர்வாகத்தின் கீழ் இயங்கும் 12 ஞானக்குழந்தைகள் இல்லங்களுக்கும் இடையேயான விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பரியோவான் கல்லூரி ஆசிரியர் எஸ். பி.காசிநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பிராந்திய உள்ளூராட்சித் திணைக்கள உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் பிரதம விருந்தினராகவும், ஈ.எஸ். பி.நிறுவன உரி மையாளர் ஈ.எஸ். பி. நாகரத்தினம், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் செல்வி மலர் சின்னையா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் வலயக் கல்வித் திணைக்கள முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.விமலநாதன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர். (204)

இசை அல்பம் வெளியீடு என்ற தலைப்புடன் தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத் திருப்பணிக்காக -

நாத அமிர்தம் இசைத் தொகுப்பு வெளியீட்டு விழா தொடர்பாக -

22.07.2009 ஆம் திகதி உதயனின் 14 ஆம் பக்கத்தில் வெளியான விளம்பரத்திற்கும்-

தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத் திருப்பணிச் சபையின் சார்பில் அதன் தலைவர் ஆ.சிவசண்முகம்ஐயர் மற்றும் செயலாளர் தி.குகனேந்திரன்ஐயர் ஆகிய இரு வரும் அறிவித்துள்ளனர்.

இதனை உதயன் வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம். (ஆ-ர்)

(^)

கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற முதலியார் முத்துத்தம்பி அவர்களின் மூத்தபுதல்வி

திருமதி மங்கையர்க்கரசி சுப்பிரமணியம் (ஆசிரியை)

அவர்கள் கொழும்பில் காலமாகிவிட்டார் என்ற செய்தி கேட்டு நாம் ஆறாத்துயர் அடைந்துள்ளோம். அவரது பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது நெஞ்சம் நிறைந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நாவலர் ஒழுங்கை,
ஆனைப்பந்தி. (87489) அயலவர்கள்.

மரண அறிவித்தல்

கணபதிப்பிள்ளை பொன்னையா

கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் நெல்லியடி பழைய தபாற்கந்தோர் வீதியை வசிப் பிடமாகவும் கொண்ட கணபதிப் பிள்ளை பொன்னையா கடந்த (28.07.2009)செவ் வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப் பிள்ளை -இலட்சுமி தம்பதியினரின் அன்பு மகனும், பொன்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை- இலட்சுமி தம்பதியினரின் அன்பு மருமகனும், சிவநாதன் (ஜேர்மனி), மனோகரி (டென்மார்க்), காலஞ்சென்ற புஸ்பாதேவி (முன்னாள், விரிவுரையாளர் யாழ்.பல்கலைக்கழக மொழியியல்துறை), தபோதினி ஆகியோரின் அன்புத் தந்தையும் , புவனேஸ்வரி, குகதாசன் (டென்மார்க்), சிறிதரன் (இயந்திரவியல், அத்தியட்சகர், மின்சாரசபை,சுன்னாகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், நதுர்ஜா, ஜனார்த்தனி, அபர்ணா, புஸ்பாகர், ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.08.2009) ஞாயிறு காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொன்னகம்
பழைய தபாற் கந்தோர் வீதி, நெல்லியடி, கரவெட்டி. (560105)

தகவல்: குடும்பத்தினர்.

7 ஆம் ஆண்டு நினைந்துருகல்

பிறப்பு 03 ★ 09 ★ 1936



இறப்பு 19 ★ 07 ★ 2002

அமரர்
இராமநாதன் கோபாலபிள்ளை
(நயினை)
திதி: பூர்வபட்ச ஏகாதசி 01.08.2009

அன்பிற்கு இலக்கணமாய்
பண்பில் உயர்ந்தவராய்
பாசத்திற்கு உறைவிடமாய்
எம்மோடு வாழ்ந்தவரே
உங்கள் நல்வாழ்வை சகிக்காமல்
நோயின் தன்மையால்
காலனவன் உங்கள் உயிரை
பறித்தது ஏனோ ஐயா
காலமெல்லாம் ஐயா உங்கள் பிரிவால்
தவிக்கின்றோம்

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

2/1, முத்த விநாயகர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(87710)

மகளிர் குரல் யாழ்.மாநகர சபையில் ஒலிக்க மகளிர் பிராந்தியத் தலைவி
அந்தோனிப்பிள்ளை மேரியம்மா
அவர்களை ஆதரித்து வெற்றிபெறச் செய்யுங்கள்

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்
இல 1க்கு வாக்களியுங்கள்

அ.றஞ்சினி (87477)

இல 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்செழு- கொக்கிருந்தபதி ஸ்ரீ கண்ணகை அம்மன் என வழங்கும் சிவகாமி அம்மன் ஆலய தேர்த்திருவிழாவில் எடுக்கப்பட்ட படங்கள்.
புதிதாக வடிவமைக்கப் பெற்ற சித்திரத்தேரில் அம்பாள் வீதிவலம் வருவதை முதலாவது படத்தில் காணலாம்.
தேர் வெள்ளோட்ட நிகழ்வில் அருளாசிச் செய்தி வழங்கிய நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளுக்கு மகோற்சவ குரு பிரம்மஸ்ரீ கிருஷ்ணசாமிக் குருக்கள் பொன்னாடை அணிவிப்பதையும் தேரை வடிவமைத்த சிற்பாச்சாரிய குழுத்தலைவர் ஸ்தபதி விஸ்வப்பிரம்ம ஸ்ரீ த.ஸ்ரீதரனுக்கு வாழ்த்துப்பத்திரம்வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.
(72)

உயர்பாதுகாப்பு வலயத்தில் 823 ஹெக்டேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ள அனுமதி

யாழ்ப்பாணம், ஓக.1

உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் 823 ஹெக்டேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ள யாழ்.மாவட்ட பாதுகாப்புக் கட்டளை அதிகாரி கடந்த 24ஆம் திகதி அனுமதி வழங்கியுள்ளார்.

அந்தப் பிரதேசத்தில் நிலக்கண்ணி வெடிகள் இல்லையா என்பதை உறுதி செய்ய மாவட்டக் கண்ணிவெடி அகற்றல் பிரிவு அதிகாரிகள் மேற்பார்வை செய்து வருகிறார்கள். அவர்களின் அறிக்கை கிடைத்தும் உடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்கப்படும்.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் இத் தகவலைத் தெரிவித்தார்.

'காலபோக நெற்செய்கை மேற்கொள்ள அனுமதி கிடைக்குமா? தென்மராட்சி தெற்கு நெற்செய்கையாளர் அங்கலாய்ப்பு' என்னும் தலைப்பில் நேற்றுமுன்தினம் உதயனில் வெளியாகியிருந்த செய்தி தொடர்பாக அரச அதிபர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேற்கண்ட தகவலை அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

அரச அதிபரின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உயர்பாதுகாப்பு வலயம் காரணமாக கடந்த காலங்களில் பயிர்ச்செய்கைக்கு அனுமதிக்கப்படாத பிரதேசங்களில் இவ்வருடம் நெற்செய்கை மேற்கொள்வதற்காக அனுமதி கேட்டு 15.06.2009 அன்று யாழ்.மாவட்ட பாதுகாப்பு படைக் கட்டளை அதிகாரிக்கு கடிதம் அனுப்பட்டது. அதற்கமைவாக யாழ்.மாவட்டத்தில் தன்கிழப்புப் பகுதியில் 447 ஹெக்ரெயரிலும் மறவன் புலவு பிரதேசத்தில் 280 ஹெக்ரெயரிலும் அரியாலை கிழக்குப் பிரதசத்தில் 96 ஹெக்ரெயரிலும் இவ்வருடம் நெற்செய்கை மேற்கொள்வதற்கு யாழ். மாவட்டக் கட்டளை அதிகாரியினால் 24.07.2009 ஆம் திகதி அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இப்பயிர்ச் செய்கைக்கு அனுமதிக்கப்பட்டுள்ள இடங்களில் நிலக்கண்ணி வெடிகள் இல்லையா என்பதை உறுதி செய்து கொள்வதற்காக மாவட்ட கண்ணிவெடி அகற்றல் பிரிவு உத்தியோகத்தர்களால் மேற்பார்வை செய்யப்பட்டு வருகிறது. அறிக்கை கிடைத்ததும் உடனடியாகச் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்கப்படும்- என்றுள்ளது.

உயர்தரப்பரீட்சையின் அனுமதி அட்டைகள் வழங்கல்

யாழ்ப்பாணம், ஓக.1

கொக்குவில் இந்துக்கல்லூரியில் இந்த ஆண்டு ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வழங்கப்படவுள்ளன.

இந்த அனுமதி அட்டைகளை முதலாம், 2ஆம் தடவை பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பெற்றோருடன் வருகை தந்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(204)

தனியார் வர்த்தக நிலையங்கள் மற்றும் சதொசா; பொருள்களின் விற்பனை விலையில் வேறுபாடு

யாழ்ப்பாணம், ஓக. 1

யாழ். நகரில் உள்ள தனியார் வர்த்தக நிலையங்கள் மற்றும் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் (சதொசா) ஆகியவற்றில் மாறுபட்ட விலைகளில் பொருள்கள் விற்பனை செய்யப்பட்டு வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஒருசில பொருள்களின் விலைகள் தனியார் வர்த்தக நிலையங்களில் அதிகரித்த விலையில் விற்பனை செய்யப்படுகின்ற போதிலும் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திலும் சில பொருள்களின் விலைகள் அதிகரித்துக் காணப்படுவதாகக் கூறப்படுகின்றது.

குடாநாட்டு மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்களான அரிசி, கோதுமை மா, சீனி போன்றன ஏ-9 பாதையூடாக எடுத்து வரப்படுகின்ற போதிலும் அவற்றின் விலைகளில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய அளவுக்கு மாற்றம் எதுவும் ஏற்படவில்லை என்று கூறப்படுகின்றது.

தனியார் வர்த்தக நிலையங்கள், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் ஆகியவற்றில் விற்பனை செய்யப்படும் பொருள்களின் விலை விவரம் வருமாறு:

பொருள்கள்	சதொசா	தனியார்
அங்கர் (400 கிராம்)	245/=	240/=
மில்குறோ (400 கிராம்)	245/=	240/=
நெஸ்பிறே (ஒருகிலோ)	595/=	600/=
கு. அரிசி	-	78/=
தீட்டல்	54/=	85/=
சம்பா	68/=	78/=
சீனி	78/=	80/=
செத்தல்	232/=	220/=
பயறு	130/=	135/=
பூடு	98/=	80/=
நெத்தலி	299/=	320/=

(203-224)

நகைத் தொழிலாளருக்குச் சங்கம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஓக.1

நகைத் தொழிலாளருக்கான சங்கம் ஒன்று சமூகசேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சங்கத்துக்கு நிர்வாகிகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்ட நகைத் தொழிலாளர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடனான சந்திப்பு ஒன்று நேற்றுமுன்தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போதே நகைத் தொழிலாளர்களுக்கான சங்கம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் நகைத் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

(203-224)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

நல்லூர் ஆலயத் திருவிழாக் காலத்தில் ஆலயச் சூழல் தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக. 1

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த திருவிழா தொடர்பிலான வசதி மேம்பாடுகள், பக்தர்களுக்கான வசதிகள், அப்பகுதியின் இயல்புநிலை, பாதுகாப்பு சார்ந்த விடயங்கள் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடலொன்று இடம் பெற்றுள்ளது.

நல்லை ஆதீனத்தில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் நல்லை ஆதீன குரு முதல்வர், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் டக்ளஸ்.தேவானந்தா, மேலதிக அரச அதிபர், மாநகரசபை ஆணையாளர், பொலிஸ் உயரதிகாரிகள் மற்றும் சமூகப் பெரியார்கள் பலரும் கலந்து கொண்டனர்.

முன்னைய காலங்களைவிட இம்முறை நல்லூர் தேர்த் திருவிழாவை மிகச் சிறந்த முறையில் குடாநாட்டின் பக்தர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கும் வகையில் நடத்துவதற்கான நடவடிக்கைகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டு வருகின்றார்.

இது தொடர்பா இச்சந்திப்பில் பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள் ளன என்று அமைச்சு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

ஆலயத் திருவிழா தொடர்பிலான நிகழ்வுகளுக்கும், பக்தர்களுக்கும் அதே நேரம் ஆலயத்தை அண்டிய பகுதி வாழும் மக்களுக்கும் பாதிப்புக்கள் ஏற்படாத வகையில் அனைத்துச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவனாந்தா தெரிவித்ததற்கு இணங்கவே மேற்படி கூட்டம் நடைபெற்றதாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(203)

வடமராட்சியில் தனியார் கல்வி நிலையங்களில் கையடக்கத் தொலைபேசிப் பாவனைக்குத் தடை

கரவெட்டி, ஓக.1

வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள தனியார் கல்வி நிலையங்களில் கையடக்கத் தொலைபேசிப் பாவனைக்கு முற்றாகத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

தனியார் கல்வி நிலையங்களின் இயக்குநர்களுக்கு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராஜா இந்த நடைமுறையை அமுல்படுத்துமாறு தெரிவித்துள்ளார்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற சேவை நயப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொலைபேசிப் பாவனைமூலம் மாணவர்களின் கல்வி நிலை பெரிதும் கேள்விக் குறியாக உள்ளதாகவும் இந்த விடயத்தில் ஒவ்வொருவரும் மிகவும் கவனமெடுக்க வேண்டும். இந்த விடயத்தில் பெற்றோரும் கவனமெடுக்க வேண்டும் என்று அவர் மேலும் கூறினார்.

பிரதேச செயலர்களின் ஒத்துழைப்புடன் கையடக்கத் தொலைபேசிகளை மாணவர்கள் பயன்படுத்துவதற்கு தடைவிதிப்பதற்கான நடைமுறைகள் அமுல்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

(203-70)

நெடுந்தீவுப் பாடசாலைகளின் அபிவிருத்திக்கு நிதியுதவி

நெடுந்தீவு, ஓக.1

மாகாண சபையின் குறித்துரைக்கப்பட்ட நிதியில் இருந்து நூலகக் கட்டடங்களை அமைப்பதற்கென நெடுந்தீவு மகா வித்தியாலயம், றோ.க, பெண்கள் கல்லூரி ஆகியவற்றிற்கு ஒவ்வொன்றும் தலா ரூபா 20 லட்சம் வீதம் 40 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (203-111)

நல்லூர் ஆலயச் சூழலில் காலநிலை மாற்ற விழிப்புணர்வுக் கருமபீடம்

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு ''காலநிலை மாற்றத்தினைத் தடுப்போம்'' என்ற தொனிப்பொருளில் ஐசாக் நிறுவனத்தால் ஆலய சூழலில் விசேட விழிப்புணர்வுக் கருமபீடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

ஆலய உற்சவ காலங்களில் தினமும் காலை 9 மணிமுதல் மாலை 7 மணிவரை திறந்திருக்கும் இந்த விசேட கருமபீடத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் தினமும் விழிப்புணர்வு நிகழ்வில் கலந்து கொள்கின்றனர்.

மாற்றம் அடைந்து வருகின்ற காலநிலை, அதனை எவ்வாறு எதிர்கொண்டு எமது பௌதீகச் சூழலை நாம் காப்பது, அதற்கான வழிமுறைகள், செயற்படுத்த வேண்டிய காலங்கள் என பல்வேறு விழிப்புணர்வு விடயங்களை 'ஐசாக்' நிறுவன உத்தியோகத்தர்கள் எடுத்துரைத்து வருகின்றனர்.

(9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவைநலன் பாராட்டு மலர்

திரு.பொன்னுத்துரை பாலசிங்கம்

(பிரதம காசாளர், இலங்கை வங்கி, மானிப்பாய்)

மனமார்ந்த வாழ்த்துக்கள்

இலங்கை வங்கி, மானிப்பாய் கிளையில் காசாளராகச் சேவையாற்றி, தனது 57ஆவது அகவையில் இளைப்பாறிச் செல்லும் பொன்னுத்துரை பாலசிங்கம் அவர்கள் இலங்கை வங்கியில் உத்தியோகத்தராக 20.02.1976இல் இணைந்து பல்வேறு கிளைகளில் கடமையாற்றியதுடன், இறுதியாக மானிப்பாய் கிளையில் 23 ஆண்டுகள் காசாளராகக் கடமையாற்றியுள்ளார். இவர் மானிப்பாய் பகுதி மக்களுக்கு பல்வேறு காலகட்டங்களில் கடமையாற்றி மக்களினதும் வர்த்தகர்களினதும் அன்பைப் பெற்றார். அத்துடன் அன்பு, பண்பு, கடமை, கண்ணியம் மிக்க உத்தியோகத்தராவார். இவர் தனது குடும்பத்துடன் ஓய்வு காலத்தில் சீரும் சிறப்புடனும், பூரண சுகத் துடன் நீண்டகாலம் வாழ மானிப்பாய் வர்த்தக சங் கத்தின் சார்பில் மனதார வாழ்த்துகின்றோம்.

மானிப்பாய் வர்த்தகர்கள்.

கண்கள் தேடுவது பாலாவைத்தான்

இலங்கை வங்கி, மானிப்பாய் கிளையில் பாலா (Bala) என்றால் அவரை அறியாதவர்கள் யாரும் இலர். வங்கியின் வாசலில் அடி வைத்ததும் எமது கண்கள் தேடுவது பாலாவைத்தான். ஏனெனில் வாடிக்கையாளர்களுக்குச் சேவை செய்யவேண்டும், அவர்களின் திருப்தியே தனது குறிக்கோள் என முன்வந்துதவும் ஒரு செயல் வீரன். அதேபோன்று அவருடன் கடமையாற்றும் சக ஊழியர்களுடனும் மிக அன்பாகப் பழகும் ஓர் அன்பர். இவர் தனது முப்பத்தி மூன்று வருட அரிய சேவையை நிறைவு செய்து வங்கிச் சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார். இவர் தனது சேவைக் காலத்தில் வங்கிச் சேவையூடாக எத்தனையோ கஷ்டப்பட்ட பாமரமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அரும் பாடுபட்டார்.

உழைப்பின் மறுவடிவம் திரு.பாலசிங்கம் (பாலா)
உதட்டோரபுன்னகையும், உணர்வை வருடுகின்ற
ஒளி முகமும்
கவிவான வார்த்தைகளும், நேர்மை திறம் விளங்கும்
அறிவுரையும்
-ஒருங்கே அமைந்த திரு.பாலா அவர்கள் ஓய்வுகாலத்தில் அவரது குடும்பத்தினருடன் சுகதேகியாக நிடூழி வாழ எல்லாம் வல்ல மானிப்பாய் மருதடி விநாயகரை சிரம்தாழ்த்தி வேண்டுகின்றேன்.

வாடிக்கையாளர்/ நண்பன்,
சு.சிவகுமாரன் (சுந்தர்சன்).

கடமை நிறைவு செய்யும் தோழன்

ஆலமரமெனவே ஆண்டு எழுபதை அடைந்த வங்கியில்
சீலமும் சிரிப்பும் கலந்து சிறந்த சேவை செய்து
கால் நியதியினால் கடமை நிறைவு செய்யும் தோழன்
ஆலமர விழுதொன்றாய் ஆகிவிட்ட அன்பன்
பாலா நீ நலமுடன் பல்லாண்டு வாழ்க! வாழ்க!!

கி.லட்சுமணசர்மா,
முகாமையாளர்,
இலங்கைவங்கி,
மானிப்பாய், சங்கானை
விரிவாக்கற் கிளை.

அன்பின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
அலுவலகப் பணி இலக்குகளை
அமைதியோடும்
அர்ப்பணிப்போடும் நடத்தி
நல்ல தகைமையின்
இலக்கணத்திற்கு சேவையாளனாகிப்
பணியாற்றி
மானிப்பாய் பிரதேச மக்களின்
தேவையினை
நாடி பிடித்தறிந்து சேவையாற்றிய
உயர்திரு. பொ.பாலசிங்கம் அவர்களே
தாங்கள் மேன்மேலும் சிறப்புற
வாழ்ந்து தொடர்ந்தும் பல்வேறு
உயர்வுகள் பெற வாழ்த்துகின்றோம்.

வங்கிச் சேவை விவரம்

சேர்ந்த திகதி:	20.02.1976
ஓய்வு பெறும் திகதி:	31.07.2009
1. மானிப்பாய்:	20.02.1976- 10.12.1978
2. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்:	11.12.1978- 11.09.1979
3. மாவட்டக் காரியாலயம்:	12.09.1979- 30.06.1980
4. மானிப்பாய்:	01.07.1980- 31.05.1989
5. மாவட்டக் காரியாலயம்:	01.06.1989- 03.10.1993
6. மானிப்பாய்:	04.10.1993- 31.01.1999
7. மாவட்டக் காரியாலயம்:	01.02.1999- 04.05.2003
8. மானிப்பாய்:	05.05.2003- 31.07.2009

அனுசரணையாளர்

வே.சி.கணபதிப்பிள்ளை
யாழ்.வீதி,
மானிப்பாய்.

V.S.M.ஸ்ரோர்ஸ்
மானிப்பாய்.

மனோ அம்பிஸ்
யாழ்.வீதி,
மானிப்பாய்.

பிள்ளையார்
களஞ்சியம்
யாழ்.வீதி,
மானிப்பாய்.

ராஜன் பல்பொருள்
வாணிபம்
யாழ்.வீதி,
மானிப்பாய்.

ஐங்கரன்
மோட்டோர்ஸ்
சந்தை முன்பாக,
மானிப்பாய்.

ரஞ்சனாஸ்
ஹாட்வெயர்ஸ்
மருதடி விநாயகர்
கோயிலடி, மானிப்பாய்.

திபோஸ்பாபு
தச்சுத் தொழிற்சாலை
யாழ்.வீதி,
மானிப்பாய்.

பமிலி சுப்பர் ஸ்பொட்
யாழ்.வீதி,
மானிப்பாய்.

சந்திரன் பான்சி பலஸ்
நவாலி றோட்,
ஆனைக்கோட்டை.

மகாலட்சுமி
குளிர் சுவையகம்
131, சந்தை முன்பாக,
மானிப்பாய்.

சிவம்
அரைக்கும் ஆலை
இலங்கை வங்கி
முன்பாக,
மானிப்பாய்.

சுந்தரலிங்கம்
இரும்புத் தொழிற்சாலை
மானிப்பாய் இந்துக்கல்லூரி
முன்பாக, மானிப்பாய்.

வைத்தீஸ்வரன்
இரும்புத் தொழிற்சாலை
மானிப்பாய் இந்துக்கல்லூரி
முன்பாக, மானிப்பாய்.

ஜோய்ஸ் பார்டிசி
யாழ்.வீதி,
மானிப்பாய்.

நவகுமரன்ஸ்
மருந்தகம்
யாழ்.வீதி,
மானிப்பாய்.

சுந்தர்சன்
யாழ்.வீதி,
மானிப்பாய்.

K.பத்மநாதன்
மானிப்பாய் மத்திய
சந்தை.

தினேஸ் வெதுப்பகம்
யாழ்.வீதி,
மானிப்பாய்.

நாயகபாலன்
புத்தகசாலை
மானிப்பாய் மகளிர் கல்லூரி
முன்பாக, மானிப்பாய்.

(சி/559987)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிப்பாய் வைத்தியசாலையில் நடப்பட்ட மரங்கள் கட்டாக்காலிகளால் அழிப்பு

நவாலி,ஓக.1

மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்திய சாலையை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் பொதுமக்களால் அன்பளிப்புச் செய்யப்பட்ட பயன்தரு மரக்கன்றுகளை கட்டாக்காலி ஆடு, மாடுகள் நாளுக்கு நாள் அழித்து வருகின்றன.

இவ்வைத்தியசாலை ஆனைக்கோட்டையில் பொதுமக்களால் வழங்கப்பட்ட காணியில் புதிதாக அமைக்கப்பட்டு கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் திறந்து வைக்கப்பட்டது.

இதனை அபிவிருத்தி செய்து வளமாக்கும் நோக்குடன் அப்பிரதேச மக்கள் தமது பிள்ளைகளின் பிறந்த நாள் ஞாபகார்த்தமாக ஒவ்வொரு பயன்தரு மரங்களை நட்டு வந்தனர்.

அத்துடன் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினாலும் பல பயன்தரு மரங்கள் வழங்கப்பட்டு நடப்பட்டன.

இவை யாவும் செழித்து வளர்ந்து பயன் தரும் வேளையில் கட்டாக்காலிகள் இவற்றை அழித்து வருகின்றன.

இவற்றைப் பாதுகாக்க வைத்திய சாலைக்கு குறிப்பிட்ட நேரங்களுக்கு காவலாளிகளை நியமித்து மரங்களைப் பாதுகாக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இப்பிரதேச மக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

(203-100)

நெடுந்தீவுக் கடற்றொழிலாளர் சங்கத்துக்கு 35 லட்சம் செலவில் குளிர்சாதன அறை

நெடுந்தீவு,ஓக.1

நெடுந்தீவு கடற்றொழிலாளர் சங்கத்தில் ரூபா 35 லட்சம் செலவில் குளிர்சாதன அறை ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதற்கான நிதியுதவியை ஐ.ஓ.எம் வழங்கவுள்ளது.

இதுதொடர்பாக ஐ.ஓ.எம். அமைப்பின் பணியாளர்கள் நெடுந்தீவுக்கு வருகை தந்திருந்தனர்.

நெடுந்தீவு மீனவர்களின் நலன் கருதி பிடிக்கப்படும் கடல் உணவுப் பொருள்களைப் பாதுகாத்து தென்பகுதிக்கு அனுப்பக் கூடியதாகவும் இந்த குளிர்சாதன அறை உதவும் எனவும் கூறப்பட்டது. (203-111)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் 15 கி.மீ.வீதியை அகலமாக்குவது தொடர்பான கலந்துரையாடல்

கோப்பாய்,ஓக.1

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் யாழ்.பருத்தித்துறை வீதியின் 15 கிலோமீற்றர் தொடக்கம் 20.65 கிலோ மீற்றர் வரையான பகுதி அகலமாக்கப்படவுள்ளது.

இது தொடர்பான கூட்டம் கடந்த திங்கட்கிழமை கோப்பாய் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

வீதியை அகலமாக்குவதற்கு 10 மீற்றர் அகலப் பாதை தேவைப்படுவதாகச் சுட்டிக் காட்டப்பட்டது.

இதனால் தற்போது வீதியின் அருகில் உள்ள வேலிகள், மதில்கள் உள்நகர்த்தப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு இப்பகுதியைச் சேர்ந்த பெருமளவு பொதுமக்கள் தமது ஒத்துழைப்பைத் தெரிவித்துள்ளதாகவும் ஏனைய மக்களும் ஆதரவு தர முன்வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இக்கூட்டத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்கள், பொறியியலாளர், பிரதேச செயலக அதிகாரிகள், கிராம அலுவலர்கள், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை அலுவலர்கள் மற்றும் ஒப்பந்தகாரர்களும் கலந்துகொண்டு திட்டங்களை வகுத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (203-72)

விளையாட்டுவிழா

சுழிபுரம்,ஓக.1

மூளாய் இந்து இளைஞர் மன்ற மாதிரி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இந்து இளைஞர் மன்றத் தலைவர் செல்வன் க.துளசிதாசன் தலைமையில் நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதனும் கௌரவ விருந்தினராகப் பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபுவும் கலந்து கொள்வர். (203-28)

நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஓக.1

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் அபிவிருத்தி உதவியாளர் திருமதி மகிந்தினி விஜயகுமார் தலைமையில் ஆன்மீக நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ''ஈழத்தில் முருக வழிபாடு'' என்னும் தலைப்பில் ஆசிரியர் க.ஈஸ்வரன் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார்.

* * *

நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் அனுசரணையில் நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் தெய்வீக இசையரங்கு நிகழ்வு நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது.

நிகழ்வில் இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு இசைக்கச்சேரி இடம்பெறவுள்ளது. பாட்டு - சி.சூரியகுமார், வயலின் - செல்வி ஜனனி நல்லைநாதன், மிருதங்கம் - செல்வன் கிருபா அனந்தகோபன், தபேலா - சதா வேல்மாறன், முகர்சிங் - செல்வன் எஸ்.விமல்சங்கர். (201)

சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

வண்ணை,ஓக.1

சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகத்தால் யாழ்.சன்மார்க்க மகாவித்தியாலய மண்டபத்தில் யாழ்.மாநகர எல்லைக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியைகளுக்கு நடத்தப்பட்டு வந்த கருத்தரங்கில் பங்கெடுத்த 60 ஆசிரியைகளுக்கும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு மேற்படி மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர சுவாமிகள் கலந்து கொள்வார் .

சிறப்பு விருந்தினர்களாக அருட்பணி எப்.ஆர்.சந்திரபோஸ் (அ.ம.தி) மற்றும் யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வி.எஸ். மாணிக்கராஜன் மற்றும் யாழ்.மாநகர சபை ஆணையாளர் எஸ்.எம். சரவணபவ ஆகியோரும் கலந்துகொள்வர்.

கலை நிகழ்வில் வில்லுப்பாட்டும், நடனமும் நடைபெறும். இடம் பெறும். (1-160)

விழாச் சிறப்புற வாழ்த்துவோர்:
ஸ்ரீ முத்துமாரி அம்மன் ரேடர்ஸ்
பல்பொருள் வாணிபம்
344, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே.இல.: 021 222 8666

நல்லூர் பெருந்திருவிழாக் கால உதயனின் சிறப்பம்சம்

மயில் மீதில் ஏறிவலம் வந்தருள்வாய்

தமிழாண்ட பெருமானே நல்லைமுருகா
தரணியில் எமையாள வந்தவிறைவா
திருமாலின் மருகோனே தீவண்ணனே
தினமுமுன் பாதமலர் தொழுவார்க்கெல்லாம்
பூமிதனில் உயர்ந்தபதம் நல்கும் தேவா
பூரணனே பூரணர்க்கும் குருவாய் நின்ற
பெருமையனே அலங்காரக் கந்தாநீயும்
பேணி மயில் மீதேறி வருவாயப்பா.

சு.குகதேவன் – தெல்லிப்பழை.

பண்புடன் வாழவைக்கும் முருகவேளே!

சுழிகொண்ட சாகரமாம் உலக வாழ்வில்
சோதனைகள் பலவற்றிற் கெனையா ளாக்கி
விழிசொரியத் தொழுதுன்னைப் பணிய வைத்து
வினையேனை மெதுவாக நின்பா லீர்த்து
வழித்தொண்டு புரிகின்ற அடியா ரோடு
வற்றாத அன்புடனே சேரத் தூண்டி
பழித்தவற்றை அவரொழிக்கும் பாங்குங் காட்டிப்
பண்புடனே வாழவைத்த முருக வேளே!

சி.வெற்றிவேலு, வட்டுக்கோட்டை.

நாடிய அன்பர்க்கு நலமளிக்கும் நல்லூரான்

ஆடிவரு மயிலேறு ஆணழகா முருகா
நம் அவலங்கள் அடியோடு மண்ணினிலே மறைய
கோடிமுறையுனைப் பணிந்தோம் கோமகனே மருகா
கொண்ட வள்ளிதெய்வானை யுடனுறை மணவாளா
பாடியுன் பாதந்தொழும் பக்தர்கள் தமது
பழவினையறுத்தருளும் பாலகா
தேடியுனை நிதமும் சரணடைந்தோம் தேவாதி தேவா
நாடிவரும் அடியவர்க்கு நல்லையிலே
வீற்றிருந்து நாளும் அருள்புரியும் நல்லூரா...
நலங்கள் பலதந்து நம்மைக் காத்திடய்யா...

க.நாகேஸ்வரா – சன்றலிப்பாய்.

கந்தனுக்கு நான் அடிமை

இராகம் – சாமா
தாளம் – ஆதி

பல்லவி

நல்லூர்க் கந்தனுக்கு நான் அடிமை – என்
நலமெல்லாம் அவனின்றி வேறில்லை.

அனுபல்லவி

வல்ல வினை தீர்த்திடும் வடிவழகன் – அவனை
வாயாரப் பாடிடவே துடித்திடுவேன்

(நல்லூர்)

சரணம் 1

சொல்லெடுக்க முடியாமல் நான் தவிப்பேன் – அவன்
சொல்லாக வந்து என் நாவுதிப்பான்
கள்ளவிழிக் கந்தனென்று நினைந்திடுவேன் – என்னை
கடைக்கண் பார்வையினால் கவர்ந்திடுவான்

(நல்லூர்)

சரணம் 11

கோடான கோடி இன்பம் என்முருகன் – அவன்
கோலஎழில் காண நல்லூர் ஓடிவருவேன்
தினைப்புலம் காத்தவள்ளி கைப்பிடித்தவன் – அவனை
நினைந்துவிட்டால் வந்துவிடும் இன்பநிலை

(நல்லூர்)

- மலர் சின்னையா.

மயிலேறி வலம் வந்தருள்

நித்தம் நின்னை நாடி வந்தோம்
முத்தமிழ் முதல்வனே உனைத் தேடி வந்தோம்
விந்தை எழில் நல்லூரின் நாயகனே
வந்தவர் குறைதீர்த்திட வடிவேலனே

குறிஞ்சி நிலத்துக் குமரா – உன்பெருமை
அறிந்து வரும் அடியவர்க்கு வரம் அருளிடு
சிறியவனாய் தந்தைக்கு உபதேசம் செய்த தேவா
வறியவராய் வாடும் வன்னி மக்களுக்கு அருளிடு

சரவணபவ என சரணடைந்தவர்க்கு சண்முகா
வரங்கள் தந்து நல்வாழ்வு தந்திடு
சூரசங்கார சுப்பிரமணியா சூழ்ந்திடும் வினை அறுத்து
நிரந்தர சமாதானம் தர மயில் மீது வலம் வந்திடு.

இ.மனேஸ்சன்- கோண்டாவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவாலி- ஹேமலதா செல்வராஜா சிறுவர் ஞாபகார்த்த நிறுவன அனுசரணையில் விசேட தேவை உடையவர்களுக்கான உதவியும் கருத்தரங்கும் நவாலி மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இதில் மறைந்த நவாலியூர் செ.சதீசுக்கு (சமூர்த்தி அலுவலர்) அஞ்சலி செலுத்தும் நிகழ்வும் இடம்பெற்றது. திருவுருவப் படத்துக்கு மாலையணிவிக்கப்பட்டு விருந்தினர்களுடன் விழா மேடைக்குக் கொண்டுசெல்லப்படுகின்றது. வலி.தென்மேற்குப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எம்.முரளி சிறப்புரையாற்றுகிறார்.

நவாலி மகாவித்தியாலய முதல்வர் இரா.வசந்தகுமார் விசேட தேவை உடையஒருவருக்கு உதவிப்பொருள் வழங்குகிறார். (படம்: இரா.சுதா)

45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 10.03.1927

மறைவு 18.06.2009

கந்தர் கணபதி

கடந்த 18.06.2009 வியாழக்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (01.08.2009) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

க.வசந்தகுமார்,
மீசாலை கிழக்கு, மீசாலை.

குடும்பத்தினர்.

(87177)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 20.04.1948

மறைவு 12.08.2008

அமரர் கனகசபை பாலசுப்பிரமணியம்
(அம்மான் சின்னராசு)

திதி: ஏகாதசி

பலகோடி இன்பங்கள் இருந்தென்ன
பல உறவுகள் இருந்தென்ன
பலகோடி சொத்து சுகங்கள் இருந்தென்ன
எங்கள் அப்பாவுக்கு நிகர் எமக்கு
இப்பாரினில் யார்தானோ
ஆண்டு ஒன்றானாலும் நேற்றுவரை எம்முடன்
இருந்த நினைவுதான் ஆறவில்லை எம் நெஞ்சமப்பா!
காலனவன் உங்களைக் கவர்ந்துதான் சென்றானோ
பொறுக்கவில்லையப்பா எம் நெஞ்சம் பொருமி வெடிக்கிறது
எப்போதாவது திரும்பி எம்மிடம் வருவீர்களா
என்றுதான் அப்பா எம்முள்ளம் இறைஞ்சுகிறது
சிறகு ஒடிந்த பறவையாய் கோதி எண்ணெய்யில்
விழுந்த புழுவாய் எம்முள்ளம் உங்கள்
நினைவுகளால் துடிக்கிறது அப்பா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சிவன் வீதி,
ஆவரங்கால் மேற்கு,
புத்தூர்.

என்றும் நினைவுடன்:
மனைவி, பிள்ளைகள்.

(87406)

நுகேகொடயில் இருவர் கொலை

கொழும்பு, ஓக.1

நுகேகொடை, வெல்லம்பிட்டிய பகுதிகளில் இனந்தெரியாத நபர்களால் இருவர் சுடப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். அத்துடன் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நுகேகொடை, தெல்கந்த பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை இனந்தெரியாத நபர்களால் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அவர்கள் இருவரும் பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவர்களா அல்லது பாதாள உலகக் குழுவினரால் அவர்கள் கொலை செய்யப்பட்டனரா என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக நுகேகொடைப் பொலிஸார் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர்.

அதேவேளை, வெல்லம்பிட்டி, கொத்தட்டுவப் பகுதியில் இளைஞர் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இக்கொலை தொடர்பாக வெல்லம்பிட்டிப் பொலிஸாரும், கொத்தட்டுவப் பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (சி)

மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் வழங்கல்

யாழ்ப்பாணம், ஓக.1

யாழ்.இந்துக் கல்லூரியில் இருந்து ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வழங்கப்படவுள்ளன.

அன்றையதினம் மாணவர்கள் அனைவரையும் வந்து பெற்றுக்கொள்ளுமாறு அதிபர் வீ.கணேசராஜா அறிவித்துள்ளார். (204)

ஆங்கில வகுப்பு

தரம் 3-11 பிரத்தியேக ஆங்கில வகுப்புகளுக்கு

தொடர்பு: 0774129371, ஆனைப்பந்தி. (87464)

விற்பனைக்கு

நல்லஇனப் புறாக்கள் (சைனா, கறனம்), 3வயது பொமனேரியன் ஆண் நாய்(Brown & Black)விற்பனைக்குண்டு.

தொடர்பு: 93, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (கைலாசரிள்ளையார் கோயில் அருகில்). (87452)

SALES

Shopping Bags, Grocery Bags, Tulip Bags, Colour, Polythene, Printed Polythene, Lunch Sheet, P.P., LDP.For Whole Sale & Retail.

Izzy Enterprise (Pvt) Ltd., No.67, Dam Street, Colombo- 12 060 2144677. Mob- 0777 677952.

(87408)

SALES

Telesonic Table Fans, Stand Fans, Box Fans, Industrial Fans, Ceiling Fans, Wall Fans, Orbit Fans, Ovens, Kettle, Gas Cookers, Mixer Grinders, Blenders, Home Speakers, Irons, Rice Cookers, DVD Players for whole sale & Retail.

Contact Riz wan- 0777 814117, 077 3952516. Izzy Enterprise (Pvt) Ltd., 155/7, Prince Street, Colombo-11.

(87409)

உதவி அர்ச்சகர் தேவை

மேற்படி எமது ஆலயத்திற்கு உதவி அர்ச்சகர் தேவை. தகுதியானோர் விண்ணப்பிக்கவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். வதிவிடம் தேவைப்படின் சபையால் ஒழுங்கு செய்து தரப்படும்.

விண்ணப்பங்களை செயலாளர், கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலன சபை, கொக்குவில் கிழக்கு என்னும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

(87443)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 13.01.1934

உதிர்வு 11.08.2008

திருமதி பத்மாவதி இராமநாதன்
(கல்வளை, சண்டிலிப்பாய்)

திதி: 01.08.2009

உருவம் மறைந்தாலும் துயரங்கள் நீங்கவில்லை
காலங்கள் மறைந்தாலும் கண்ணீர் நிற்கவில்லை- அம்மா!
நாம் வாழும் காலங்களில் உங்கள் நினைவுகள்- என்றும்
எம்மை விட்டு அகலாது என்றும் வழ்வீர்கள் எம் இதயத்தில்.

என்றும் உங்கள் நினைவில்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"குகன் இல்லம்",
கல்வளை, சண்டிலிப்பாய். (87450)

ஓராண்டு நினைவஞ்சலி

திருமதி மரியநாயகம் மாகிறேட்

மண்ணில் 01.04.1936

விண்ணில் 01.08.2008

மண்ணக வாழ்வில் எம்மை விட்டுப் பிரிந்து சென்ற அம்மாவே!
வாழும் காலமெல்லாம் எம் வாழ்வு சிறக்க வைத்தீர்
குழந்தை முதல் இளமைப் பருவம் வரை அன்பும் அறிவும் ஊட்டி வளர்த்தீர்
நீர் எம்முடன் வாழும் காலங்கள் குறுகியது என
ஆண்டவன் எமக்கு உணர்த்த மறந்தார்
தந்தை இல்லாத காலத்திலும் அந்தத் துயரம் தெரியாது
இரு பாசங்களிலும் எம்மை செழிக்க வைத்தீர்
எம்மை இடைநடுவே தவிக்கவிட்டு - தனியே
நீர் சென்றதால் துயரம் தாங்காது நெஞ்சம் எரிமலையாய் வெடிக்கிறது
இனி எந்த உறவில் உம்மை நாம் காண்போம்
மறுபிறப்பிலும் உம் வயிற்றில் பிள்ளையாய் பிறக்க ஏங்குகின்றோம் அம்மா....!

உம்முடைய ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

859/6, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(87319)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம்பெயர் இலக்கியம் - ஓர் அறிமுகம்

க.பொ.த. உயர்தர மாணவர்களுக்காகவே

சு.குணேஸ்வரன்
ஆசிரியர், பா/அம்பன் அ.மி.த.க.பாடசாலை.

(சென்றவாரத் தொடர்ச்சி)

கவிதை

புலம்பெயர் படைப்புக்களில் கவிதைகள் பற்றி நோக்கும்போது இதுவரை வெளிவந்துள்ள புலம்பெயர் படைப்புக்களுள் கவிதைத்தொகுப்புக்களே அதிகமானவையாகும். கவிதைகள் அவை பாடுகின்ற பொருட்பரப்பிலும் அவற்றின் புனைதிறன் உத்தியிலும் திருப்திப்படக்கூடிய அளவுக்கு புதிய வெளிச்சங்களைக் காட்டி நிற்கின்றன.

புலம்பெயர்ந்த காலத்தில் 80 களின் இறுதிவரை தாயக நினைவினையும் அவலத்தையும் பாடிக்கொண்டிருந்த அதிகமான கவிஞர்கள் தற்போது தாம் புலம்பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் நாட்டின் சூழலைப் புரிந்து கொண்டு அந்நாட்டின் வாழ்வனுபவங்களையும் பாடத்தொடங்கியுள்ளனர்.

இந்த வகையில் சேரன், வ.ஐ.ச.ஜெயபாலன், செழியன், கி. பி. அரவிந்தன், இளவாலை விஜயேந்திரன், திருமாவளவன், சக்கரவர்த்தி, நட்சத்திரன் செவ்விந்தியன், தா. பாலகணேசன், இளைய அப்துல்லா, முல்லை அமுதன், முல்லையூரான், மைத்திரேயி, பிரதீபா, றஞ்சினி, ஆழியாள் என்றதொரு நீண்ட பட்டியலே கவிதையில் உண்டு.

நோர்வேயில் இருந்து சுவடுகள் பதிப்பகத்தால் வெளியிடப்பட்ட 'துருவச் சுவடுகள்' என்ற கவிதைத் தொகுப்பே புலம்பெயர்தோர் மத்தியிலிருந்து வெளிவந்த முதலாவது கவிதைத் தொகுப்பாகக் கணிக்கப்படுகிறது. புலம்பெயர்ந்த பெண்கள் மத்தியிலிருந்து வெளிவந்த 'மறையாத மறுபாதி' என்ற கவிதைத் தொகுப்பும் மிகுந்த கவனத்திற்குரிய பெண் கவிஞர்களின் கவிதைகளைத் தாங்கிவந்த தொகுப்பாகும்.

சிறுகதை

கவிதைகளுக்கு அடுத்தபடியாக சிறுகதைகள் முக்கியமானவை. புகலிடத்திலிருந்து வெளியான சஞ்சிகைகளில் வெளிவந்த கதைகளைத் தொகுத்து 'மண்ணைத் தேடும் மனங்கள்' என்ற பெயரிலான தொகுப்பு ஒன்று 1986 இல் வெளியாகியது. இதன் பின்னர் புலம்பெயர்ந்தோர் கதைகள் பனியும் பனையும் ஆகிய சிறுகதைத் தொகுப்புகள் வெளிவந்தன. பெண் படைப்பாளிகளின் கதைகளைத் தொகுத்து 'புது உலகம் எமை நோக்கி' என்று வெளியிட்டனர். இவையெல்லாம் புலம்பெயர் சிறுகதைகளில் தவிர்க்கமுடியாத முக்கியமான ஆரம்பகாலத் தொகுப்புகளாகும். இதன் பின்னர் பல முயற்சிகள் நடந்தேறியுள்ளன.

சிறுகதைகளைப் படைத்துவரும் புலம்பெயர் படைப்பாளிகளில் அ. முத்துலிங்கம், பொ.கருணாகரமூத்தி, குமார்மூர்த்தி, க. கலாமோகன், பார்த்திபன், ஷோபா சக்தி, சக்கரவர்த்தி, விமல் குழந்தைவேல், ஆசி. கந்தராஜா, முருகபூபதி, ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், அருண் விஜயராணி, நிரூபா, சுமதிரூபன் எனப் பலர் எழுதி வருகின்றனர். புதியவைகளின் வரவும் முக்கியமானது.

நாவல்

80 களின் இறுதிப்பகுதியில் இருந்தே புலம்பெயர் படைப்பாளிகளிடம் இருந்து நாவல்கள் வெளிவரத் தொடங்கின. பார்த்திபனின் பல குறுநாவல்கள் ஆரம்பத்தில் வெளிவந்தன. ஆரம்பத்தில் வெளிவந்த நாவல்கள் தாயக நினைவுடன் தொடர்புபட்டவையாகவும் சீதனப் பிரச்சினை, சாதிப் பிரச்சினை, காதல் மற்றும் திருமண உறவுகள், இனப் போராட்டத்தின் அவலம் என்பவற்றையே மையமாகவும் கொண்டிருந்தன.

சிறிது காலத்தின் பின்னரே தாம் வாழ்கின்ற சூழலைச் சுட்டும் படைப்புக்களை வரையத் தொடங்கினர். இவ்வகையில் இன்று புலம்பெயர் நாவல்களைப் படைத்த படைப்பாளிகளில் ஷோபா சக்தி, ராஜேஸ்வரி பாலசுப்பரமணியம், விமல் குழந்தைவேல், முல்லை அமுதன், மா. கி. கிறிஸ்ரியன், கி. செ. துரை, பார்த்திபன், இ. தியாகலிங்கம், ஆகியோரைக் குறிப்பிடலாம். இற்றைவரை சுமார் 75 இற்கும் மேற்பட்ட நாவல்கள் வெளிவந்துள்ளன.

புலம் பெயர் படைப்புகளில் கவிதை, சிறுகதை, நாவல் என்பனவற்றின் உள்ளடக்கத்தினை பின்வருமாறு வகைப்படுத்தலாம். இது இப்படைப்புக்களின் பொதுவான பார்வையில் வரும்போது தாயகம் சார்ந்த படைப்புக்கள், புலம்பெயர் சூழல் சார்ந்த படைப்புக்கள் என இரண்டாகவும் வகுக்கலாம். எனினும் அவைசுட்டும் பொருள்பரப்பினை நுணுகி நோக்கும்போது அவற்றைப் பின்வரும் ஆறு பெரும் பிரிவுக்குள் வகைப்படுத்தி நோக்கலாம்.

புலம்பெயர் படைப்புக்களின் உள்ளடக்கம்

1. தாயக நினைவும் போர்ச்சூழலும்

குடும்பம், உறவு, பிரிவு, ஏக்கம், கிராமத்து வாழ்வு, சாதி, சீதனம், மரபுகள், நம்பிக்கைகள் ஆகியவற்றை இந்த வரையறைக்குள் அடக்கலாம்.

தாயக நினைவை ஈழத் தமிழர்கள் தாம் புலம்பெயர்ந்த காலத்திலிருந்து இன்றுவரையும் வெளிப்படுத்தியபடி இருக்கிறார்கள். கவிஞர் செல்வத்தின் கவிதை வரிகள் தாயக நினைவை வெளிப்படுத்தும் கவிதைகளுக்குச் சிறந்த உதாரணமாகும்.

சிறுகுருவி வீடு கட்டும்
தென்னோலை பாட்டிசைக்கும்
ஆரியப் பொடியன் செவ்வரத்தம் பூவை
புணரும் என் ஊரில் இருப்பிழந்தேன்.
அலை எழும்பும் கடலோரம் ஒரு வீடும்
செம்மண் பாதையோரம்
ஓர் தோட்டமும்
கனவுப் பணம் தேட
கடல் கடந்தோம்
நானும் நாங்களும்
அகதித் தரையில்
முகமிழந்தோம்.

[தொடரும்]

பொய்யாகிப் போனா பொய்க்கால் குதிரையாட்டம்

உமா மகேஸ்வரி,
உடுவில் தெற்கு, மானிப்பாய்.

(சென்றவாரத் தொடர்ச்சி)

இக் குதிரையாட்டத்தில் தேர்ச்சி பெற்ற கிராமியக் கலைப் பரம்பரையினரின் சில பகுதியினர் இன்று பொருளாதார நிலையில் மிகவும் பின் தள்ளப்பட்டு தமக்கு ஒரு மேடை கிடைக்காதா, அதன் மூலம் பணம் கிடைக்காதா என ஏங்குகின்றனர். ஏன்எனில் ஆரம்ப காலத்தில் கூத்துக்கலையின் மூலம் தமது ஜீவனோபாயத்தை மிகவும் சிறப்பாகக் கொண்டு நடத்தினர். ஆனால், வரன்முறைக் கல்வி பிரபுக்களையும், தனவந்தர்களையும் நடுநாயகமாகக் கொண்டு பரவத் தொடங்கியதால் இந்த நாட்டார் கலைச் செல்வங்கள் எல்லாம் புறக்கணிப்புக்கு உள்ளாகின. இக்கலைக்காக பக்கவாத்தியம் வாசித்த கலைஞர்களும், இதற்கான ஆடைகளைத் தயாரித்த கலைஞர்களும் தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்தச் சிரமப்பட்டு எங்கோ ஓர் திசையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், இருப்பார்கள். இக்கலைப் பரம்பரையின் வாரிசுகள் நாகரிக உலகத்தில் வளர்ந்து வரும் தொழில்நுட்பத்தில் தமது திசையைத் திருப்பி தமது ஆரம்பகால கலைச் சொத்தை மறந்தவர்களாக வளர்ந்துள்ளனர். எப்படியிருந்தபோதிலும் படித்த சில பெரியோர்களின் முயற்சியால் ஏட்டு வடிவிற்கு வந்த இப்பொய்க் கால் குதிரையாட்டம் பற்றிய குறிப்புக்களை அறிந்த சில தனியார் நிறுவனங்களும், ஆலய சமூகங்களும், இவற்றை மீண்டும் எமது மக்களுக்கு ஞாபகப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் ஆலய விழாக்கள், கலாசார விழாக்கள், பாடசலை விழாக்களில் ஆடி வருகின்றனர். ஆனால், இது எவ்வளவு தூரம் பழைமையை ஒத்தது என்பது கேள்விக்குறியே. ஏன் எனில் பெரும்பாலும் இவ்வாடல்களில் குதிரையின் துள்ளல் மாத்திரமே இடம்பெறுவதைக் காணலாம். இன்றும் சில ஆலயங்களில் உதாரணமாக இணுவில் கந்தசுவாமி கோயில், நல்லூர் கந்தசுவாமி கோயில், சுதுவையம்பதி புவனேஸ்வரி அம்பாள் ஆலயங்களில் சூரசம்ஹார நிகழ்வு நாள்களில் வருடத்தில் ஒரு தடவை நிகழ்த்தி வருவதைக் காணக் கூடியதாக உள்ளது. எப்படியிருந்த போதிலும் அன்று பார்த்த மரக்கட்டைக் கால் இன்று மறைந்தே போய்விட்டது. எமது பாரம்பரிய குதிரையாட்டம் இன்று கழுதையாட்டமாகத்தான் இருக்கிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது. மரக்கால் இன்றி ஆடுதல் மற்றும் சினிமாப் பாடல்களுக்கு ஆடுதல், சினிமாவில் பயன்படுத்துகின்றபோது ஆடிவிட்டு குதிரையைக் கழற்றி எறிந்துவிட்டு வேறு வகையாக ஆடுதல் போன்ற நிகழ்வுகள் உண்மையான கலைஞனின் உள்ளத்தை உறுத்துவனவாக அமைகின்றன. புதுமைகளைப் புகுத்துவதாக எண்ணி மரபினை மாற்றுவது சரியாகாதல்லவா.

கலைக்கெல்லாம் ஊற்றாய் விளங்கும் தமிழ் நாட்டிலேயே இக்கலை கேள்விக்குறியாய் இருப்பதாக பிரபல குதிரையாட்டக் கலைஞர் கலைமாமணி பு.நாடிராவ் கூறும்போது, இலங்கையில் அருகிப்போயிருப்பதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. எனினும் கிழக்குப் பல்கலைக்கழகத்திலே நாட்டுக்கூத்துக்கலைக்கு முக்கியத்துவம் கொடுத்து அது பற்றிய ஆராய்ச்சிகளையும் பல நாட்டுக்கூத்துக்களையும் மேடையேற்றிவரும் பேராசிரியர் சி.மௌனகுரு ஐயா அவர்களின் முயற்சியை ஒத்த ஓர் முயற்சி எமது பல்கலைக்கழகத்தில் கொண்டு வருவது எமது பாரம்பரிய கலைகளைக் காக்கும் ஒரு பொக்கிஷத் திட்டமாக அமையக்கூடும்; அமையவேண்டும். ஒவ்வொரு பரீட்சையிலும் சாஸ்திரீய கலையை வளர்க்கும் எமது கலை நிறுவனங்கள் கிராமியக் கலைக்கும் முழுமையான அங்கீகாரம் கொடுக்கவேண்டும். மொத்தத்தில் எமது தமிழ் மண்ணில் பொய்க்கால் குதிரையாட்டம் பொய்யாகிப் போகாமல் காத்துக்கொள்வது எம் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

(முற்றும்)

நினைவில் அமிழ்தல்

சோதனை-வேதனை-சாதனை

பா.நாகேஸ்வரன்,
தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்.

யாழ். பேருந்து நிலையத்தில் இருந்து கச்சேரி செல்லும் தனியார் பேருந்தின் கடைசி இருக்கையில் அமர்ந்தேன். என் அருகில் அரச ஊழியர் ஒருவர் அமர்ந்திருந்தார். பேருந்து மெல்ல அசைந்து புறப்பட ஆயத்தமாகியது. வேகமாக ஓடி வந்த ஒரு பெண்பிள்ளை நடுத்தர வயதான தாயுடன் வந்து ஏறினார். என் அருகே வந்து நின்றனர். அவர்களைப் பார்த்த மாத்திரத்திலேயே வசதி குறைந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிந்துகொண்டேன்.

அந்த இளம் பெண்பிள்ளையின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்து ஓடியது. கையில் இருந்த கைக்குட்டையால் கண்ணீரைத் துடைத்தாள். ஆனால் துன்பம் கண்ணீராக வரத் தொடங்கியது. "அழாதையும் பிள்ளை" என ஆறுதல் கூறினேன். அவரது தாயார் "ஐயா, இன்று ஆஸ்பத்திரியில் நடந்த நேர்முகப் பரீட்சைக்கு என் மகள் தோற்றினாள். சகலதும் சரி. ஆனால் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தை கொண்டுசெல்ல மறந்துவிட்டாள். போட்டோ பிரதியே கொடுத்தோம். அதனை ஏற்க மறுத்துவிட்டனர். அதுதான் கச்சேரி போகின்றோம்" என்று கூறினார். "போட்டோப் பிரதியில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் இலக்கம் இருப்பதனால் கவலை வேண்டாம்" என ஆறுதல் கூற பிள்ளையின் கண்ணீர் நின்றது.

வேலை வாய்ப்பு கிடைப்பது அரிது. உரிய காலத்தில் உரிய ஆவணங்களை அவர்களின் கழகத்தின் பிரகாரம் கேட்கப்பட்டதைக் கொண்டு செல்வது அவசியம் அல்லவா? எத்தனை கவலையீனம்.

அப்போது என் அருகில் இருந்த அரச ஊழியர் "ஐயா, இது பரவாயில்லை. எனது சகோதரி பட்டதாரி. நாங்கள் வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள். முத்திரைச் சந்திக்கு இருவரும் கல்விக் கந்தோர் நேர்முகப் பரீட்சைக்கு [illegible] வந்திருந்தோம். அதிகாலை முதல் பேருந்தில் ஏறி முத்திரைச் சந்தியை வந்தடைந்தோம். பேருந்தில் இறங்கியதும் ஆவணங்களைச் சரிபார்க்கும் படி நான் கூற, அண்ணை நேர்முகப் பரீட்சை அனுமதிப் பத்திரத்தைக் கொண்டு வர மறந்துவிட்டேன் எனக் கவலையுடன் சகோதரி கூறினார். வேறு வழி? ஆட்டோ ஒன்றைப் பிடித்து விடு நோக்கினோம். கடிதத்தை எடுத்துக் கொண்டுவர பெரும் மழை கொட்டியது. சிறு புயலும் மழையும் சேர்ந்ததால் ஆட்டோ தாங்காது அல்லவா? மறைப்புத் துணியும் சிழிந்து இருந்தது. எனது நிலையை என்னவென்று சொல்ல? கல்விக் கந்தோருக்கு நனைந்து, தோய்ந்துதான் வந்தோம். நல்ல வேளை நேர்முகப் பரீட்சைக்கு சில நிமிடங்களே இருந்தன"- என்றார்.

எப்படி படித்த நிலையில் உள்ளவர்களின் கவலையீனம்? நமக்குத் தேவையானவற்றை முதல் நாளே ஆயத்தம் செய்வது தவறா? இளம் வட்டத்தினர்கள் இதனை மனதில் கொள்ளவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படங்கள் தரும் பதிவுகள்

கரவை, தச்சந்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலய வரலாற்று நூல் வெளியீட்டு விழாவில் வல்வை சிவகுருவித்தியாலய அதிபர் ஆறுமுகம் சிவநாதன் ஆய்வுரை நிகழ்த்துவதையும், நூலின் முதற்பிரதியை நூலாசிரியர் க. ஆனந்தகுமாரசாமி சிவப்பிரம்ம ஸ்ரீகணேச சபாபதிக் குருக்களிடம் கையளிப்பதையும் படங்களில் காணலாம்.

உடுவில் அ. மி. த. க பாடசாலை மாணவத் தலைவர்களுக்குச் சின்னஞ்சூட்டப்பட்டது.

செல்வன் ஆ. பிரதீப் மாணவர் தலைவராகவும், செல்வி கி. கம்சாயினி மாணவித் தலைவியாகவும் உடுவில் முருகமூர்த்தி வித்தியாலய அதிபர் சி.பஞ்சாட்சரம் சின்னஞ் சூட்டுவதைக் காணலாம். (149)

மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தின் முன்னாள் அதிபரும், தற்போதைய ஓய்வு பெற்ற அதிபருமான செ. சுப்பிரமணியம் கமலாசனி வித்தியாலயத்துக்கு ஒலி பெருக்கிச் சாதனங்களைப் பாடசாலை அதிபர் செ. பேரின்பநாதனிடம் அன்பளிப்பாக வழங்குகிறார்.

கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நிலைய உறுப்பினர்களால் குருதிக்கொடை வழங்கும் நிகழ்வு அண்மையில் நிலைய முன்றலில் நடைபெற்றபோது இளைஞர் ஒருவர் குருதி வழங்குவதை படத்தில் காணலாம். (288)

வலிகாமம் மேற்கு உப அலுவலகத்தில் தேசிய வாசிப்பு மாத நிகழ்வு உப அலுவலக சிரேஷ்ட பொறுப்பதிகாரி செல்வி அ. நாகேஸ்வரி தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலி.மேற்கு சுழிபுரம் பிரதேச சபைச் செயலாளர் சு.புத்திசிகாமணி உரை நிகழ்த்துகின்றார். (படம்: இரா:சுதா)

சங்கானை பேச்சி அம்மன் ஆலயத்தில் அண்மையில் இடம்பெற்ற தீ மிதித்தல் நிகழ்வின்போது பக்தர் ஒருவர் தீ மிதிப்பதையும் அடியார்கள் சூழ்ந்து நிற்பதையும் படத்தில் காணலாம். (29)

தென்மராட்சிப் பிரதேசத்தில் 'நிஷா' வினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினர் உலர் உணவுப் பொருள்களை அண்மையில் வழங்கியுள்ளனர்.

கழகத் தலைவர் லயன் செ. சரவணமுத்து பயனாளி ஒருவருக்கு உலர் உணவுப் பொதி வழங்குவதையும் அருகில் பிராந்தியத் தலைவர் லயன் வ. ஸ்ரீபிரகாஸ் உப கழக உறுப்பினர்கள் நிற்பதைப் படத்தில் காணலாம். (267)

மத்திய - மாகாண அரச முகாமையாளர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாவலர் கலாசார மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

கூட்டத்தில் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் உரை நிகழ்த்துவதையும் யாழ்.உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், யாழ். கட்றொழில் நீரியல் வளத்துறை உதவிப் பணிப்பாளர் கே.தர்மலிங்கம், யாழ் மாநரசபை ஆணையாளர் மு. செ. சரவணபவ, பிராந்திய ஆணையாளர் திருமதி ப. சிவலிங்கம், சங்கத் தலைவர் இ. இரத்தினசிங்கம், கதாதாரசேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் ஆகியோர் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம். (படம்- லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகச்சாலை

நிஜங்களின் நிழல்கள்

கவிதை உலகில் நன்கு அறியப்பட்ட நெடுந்தீவு லக்ஸ்மனின் மூன்றாவது கவிதைத் தொகுப்பான "நிஜங்களின் நிழல்கள்" வெளிவந்துள்ளது.

உரிமைக்காய் உயிர் நீத்த உறவுகளுக்கு இந்நூல் சமர்ப்பணம் எனத் தொடங்கி நூலின் கவிப்பக்கத்தினை அடுக்கடுக்காய் நகர்த்திச் செல்லும் மூத்த கவிஞர் லக்ஸ்மன் சமூகத்தின் பொறுப்புணர்ந்து, தேவையினையறிந்து, உணர்ந்து கவி சொல்லும் விதம் அவர் ஒரு காலத்தைப் பிரதிபலிக்கும் கவிஞன் என்ற யதார்த்தத்தை உணர்ந்துகொள்ள முடிகிறது.

எம்மை வாட்டி வதக்கிய யுத்தம், எம் இதயத்தைக் கசக்கிப் பிழிகின்ற சமூகச் சாக்கடைகள் எனப் பல்வேறு பிரச்சினைகளையும் அதனால் உண்டான வேதனைகளையும் கவி வடித்திருக்கும் சாதனை அவர் கவி வடிவில் சொல்லியிருக்கும் விதம் பாராட்டத்தக்கது.

நெடுந்தீவு லக்ஸ்மனின் "நிஜங்களின் நிழல்" கவிதைத் தொகுப்பானது ஆரவாரம் இன்றி, ஆடம்பரமின்றி, அமைதியாக வெளிவந்த ஈழத்தவரின் இதய வலிகளைத் தாங்கி நிஜங்களின் நிஜங்களாக வெளிவந்துள்ளமை பாராட்டக்கூடியதொன்றாகும்.

இடி விழுந்த வம்பி

கல்முனைப் பிரதேசத்தின் கவிதைச் சூழலை தன்னுள் உள்வாங்கி தனித்துவமான மொழியாடலைக் கொண்டதாக "இடி விழுந்த வம்மி" என்ற முதலாவது கவிதைத் தொகுப்பை பிரசவித்துள்ளார் கவிஞர் அபார்.

சிக்கலற்ற எளிமை கொண்ட சொற்களால் கட்டமைக்கப்பட்டவை அபாரின் கவிதைகள் இதனால் அகவய புறவய எண்ண அலைகளை வெகு எளிதாக வாசகர்களை இவரின் கவிதைகள் வசீகரிக்கின்றன.

வாழ்தலில் எழுகின்றதுயரங்களும் காத்திருத்தல்களும் மன அவலங்களும் மனிதத்தின் இழி நிலையும் அபாரின் கவிதைகளின் பாடு பொருள்களாயுள்ளன. இது வாசிப்போரின் உணர்வுத்தளத்தோடு மிக நெருக்கமான உறவுநிலை கொண்டு ஊடாடுகின்றது.

தத்தம் அனுபவ நிலைசார் வெளிப்பாடுகளை ஒவ்வொருவரும் அபாரின் கவிதைகளில் இனங்கண்டு கொள்ளவும் முடிகின்றது.

காலத்தால் புறக்கணிக்கப்படமுடியதவராக தன்னுடைய "இடி விழுந்த வம்மி" மூலம் தனது இருப்பை அபார் உறுதி செய்துள்ளார்.

மழவராயர் கந்தையா மும்மணிமாலை

சைவப்புலவர் இ.செல்லத்துரை எழுதிய புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினரின் வெளியீடான "மழவராயர் கந்தையா மும்மணிமாலை" நூல் வெளிவந்துள்ளது.

புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரியின் நிறுவுநரும் கொடை வள்ளலுமாகிய புத்தூர் மழவராயர் கந்தையாவின் வாழ்க்கைக் குறிப்புகளை அவரது பணிகளையும் சிறப்புகளையும் வெண்பா, அகவற்பா, கலித்துறைப்பா எனும் மூவகை செய்யுள் வடிவில் இந்நூல் அமைந்துள்ளது.

தமிழுக்குச் சொந்தமான வளமான சொற்றொடர்களை இணைத்து அமரர் கந்தையா வள்ளலின் சிறப்புகளைச் செழுமையுடன் செவ்வனே சொல்லியிருக்கும் விதம் அவர் பெருமைக்கும் முடிசூடுவதுடன் தமிழுக்கும் அழகூட்டுகிறது. ஒரு சமூகப் பெரியாரின் வாழ்வியலின் சிறப்புகளை இளம் சமுதாயத்தினருக்குப் பதிவாக்கியுள்ள சைவப்புலவர் செல்லத்துரை பாராட்டத்தக்கவர்.

மக்கள் முகம்

அகில இலங்கைத் திருமுறைமன்றம் வருடந்தோறும் பூரணைத் தினத்தில் நடத்திவரும் திருமுறைப் பெருவிழா எதிர்வரும் புதன் கிழமை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் 40 வருடங்களுக்கு திருமுறை சேவை ஆற்றி வருபவரும் தமிழகத்தில், மலேசியா, சிங்கப்பூர், லண்டன் போன்ற நாடுகளில் ஓதுவார் மூர்த்தியாகவும் பண்ணிசை வகுப்புகள் நடத்துபவராகவும் இருந்து தற்பொழுது யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை ஸ்ரீவாலாம்பிகை சமேத ஸ்ரீவைத்தீஸ்வர ஆலய ஓதுவார் மூர்த்தியும் அகில இலங்கைத் திருமுறை மன்ற தேவாரப்பண்ணிசை ஆசிரியருமான துறைசை ஆதீன திருமுறைத்தோன்றல், கலாபூஷணம், திருவாவடுதுறை ஆதீன திருமுறை இசைப்புலவரும், தெய்வத் தமிழிசைச் செல்வர், திருமுறை வித்தகர், நல்லை ஆதீன பண்ணிசைப் புலவரும், தேவார இசைமணி கே.எஸ்.ஆர். திருஞானசம்பந்தன் இவ்வாண்டு திருமுறை இசைவல்லாளராகக் கௌரவிக்கப்பட்டு பாராட்டப்படவுள்ளார்.

இவர் தனது தந்தையார் இராசையாவிடம் ஆரம்ப பண்ணிசைக் கல்வியைப் பெற்று பயின்று பின் தமிழகத்தில் பல தேவார விற்பன்னர்களிடம் பண்ணிசைப் பயிற்சி பெற்று அவர்களுடன் இணைந்து பல தேவார இன்னிசைக் கச்சேரிகளிலும் பாடியுள்ளார்.

★★★ ★★★ ★★★

கோப்பாய் பிரதேச செயலகத்திற்கு திட்டமிடற் பணிப்பாளராகக் கடந்த 29.06.2009 தொடக்கம் இரத்தினராசா கிருஷ்ணராசன் நியமனம் பெற்றுள்ளார்.

இவர் கடந்த 2007ஆம் ஆண்டு நடைபெற்ற இலங்கை திட்டமிடல் சேவைக்கு இணைத்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சையில் தெரிவாகிப் பயிற்சியின் பின்பு முதல் நியமனமாகக் கோப்பாய் பிரதேச செயலகத்திற்குப் பணிக்கு வந்துள்ளார்.

கொக்குவிலைச் சேர்ந்த இவர் கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவனும் யாழ்.பல்கலைக்கழக பௌதிக விஞ்ஞான பட்டதாரியும் ஆவார். (72)

★★★ ★★★ ★★★

மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளையில் காசாளராகப் பணிபுரிந்து தனது 55ஆவது வயதில் சங்கானையைச் சேர்ந்த பொன்னுத்துரை பாலசிங்கம் நேற்றுடன் ஓய்வு பெற்றார்.

இவர் 20.02.1976முதல் 31.07.2009முதல் வங்கிச் சேவையில் பணிபுரிந்தவராவார்.

★★★ ★★★ ★★★

பொதுமுகாமைத்துவ உதவியாளர் தரம் Iக்கு கடந்த வருடம் நடத்தப்பட்ட பொதுமுகாமைத்துவ உதவியாளர் தரம் IIஐச் சேர்ந்தவர்களிடை [illegible] பரீட்சையில் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் திருமதி ஜெயந்தி ஜெயசீலன் சித்திபெற்றுள்ளார்.

செய்திச் சரம்... செய்திச் சரம்...

இலவச கணனி வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஓக.1

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இலவச கணனி வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் கல்வி அமைச்சரும், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் கலந்துகொள்வர்.

வடமராட்சி, வலிகாமம், தீவகம், தென்மராட்சி ஆகிய கல்வி வலயங்களைச் சேர்ந்த பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், வகை Iஏபி, Iசி, வகை II ஆகிய பாடசாலைகளின் அதிபர்கள், அப்பாடசாலைகளில் ஐசிரி பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் ஆகியோரை இந்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (204-207)

கூட்டங்கள்

கோப்பாய்,ஓக.1

கோப்பாய் பிரதேச செயலக பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் விவசாயக் குழுக்கூட்டமும் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (201-72)

காசநோய்க் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஓக.1

சித்த ஆயுள்வேத மருத்துவர்களுக்கு காசநோய் சம்பந்தமான மூன்று நாள் பயிற்சிக் கருத்தரங்கு அண்மையில் இடம் பெற்றுள்ளது.

இக்கருத்தரங்கில் 20 சித்த மருத்துவர்கள் பங்குபற்றியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (201-224)

இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம்,ஓக.1

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் எதிர்வரும் புதன்கிழமை பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் இரத்ததானம் செய்ய விரும்புபவர்களை கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (204)

பாண்டவட்டைக் கிராமத்தில் 6 லட்சம் செலவில் வீடுகள்

தொல்புரம்,ஓக.1

தென்னிந்தியத் திருச்சபையின் உதவியுடன் சுழிபுரம் பாண்டவட்டைக் கிராமத்தில் 22 குடும்பங்களுக்கு சுமார் ஆறு லட்சம் ரூபா பெறுமதியான வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதாக சுழிபுரம் கிழக்கு கிராம உத்தியோகத்தர் சீ.ஜீவராஜா அறிவித்துள்ளார். (201-119)

தென்மராட்சி ஊழியருக்கென விசேட பஸ்சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஓக.1

தென்மராட்சி பிரதேசத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்குச் செல்லும் அரச ஊழியர்களுக்கென பேருந்துச் சேவை ஒன்று கடந்த புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காலை 7.15 மணிக்கு மிருசுவிலில் இருந்து பேருந்து புறப்படும். மீண்டும் மாலை 4.15 மணிக்கு யாழ்.பேருந்து நிலையத்திலிருந்து பேருந்து புறப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (1-207)

குடத்தனைப் பகுதி மக்களுக்கு உதவிப்பொருள்கள் வழங்கல்

யாழ்ப்பாணம்,ஓக.1

'கியூடெக்' நிறுவனத்தின் ஏற்பாட்டில் வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பகுதி மக்களுக்குச் சுயதொழில் மேற்கொள்ளுவதற்கான உதவிப் பொருள்கள் வழங்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

20 பயனாளிகளுக்குத் தலா 2 லட்சம் பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரமும், 50 பயனாளிகளுக்கு தலா 3 லட்சம் பெறுமதியான தண்ணீர்த் தொட்டிகளும், [illegible] 35 ஆயிரம் பெறுமதி [illegible] தச்சு வேலைக் கருவிகளும் வழங்கப்படவுள்ளன. (204)

ஆயுள்வேத வைத்தியர்கள் விவரம் திரட்டல்

கோப்பாய்,ஓக.1

'வடக்கின் வசந்தம்' திட்டத்தின் கீழ் பிரதேச செயலகம்தோறும் ஆயுள்வேத வைத்தியர்களின் விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் பதிவினைப் பெற்ற பாரம்பரிய மருத்துவர்கள், பதிவினை எதிர்பார்க்கும் பாரம்பரிய மருத்துவர்கள், மற்றும் பதிவினைப் பெற்று தற்போது நோயுற்ற நிலையில் உள்ள மருத்துவர்கள் என்னும் அடிப்படையில் விவரங்கள் திரட்டப்படுகின்றன.

மேற்படி விவரங்கள் இலங்கை ஆயுள்வேத மருத்துவ சபையால் கோரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (201-72)

பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

கோப்பாய்,ஓக.1

கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் தொழில்துறைத் திணைக்களத்தால் ஆரம்பிக்கப்படவுள்ள ஓட்டோ திருத்துதல், அலுமினியம் பொருத்துதல் ஆகிய பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

பயிற்சி நெறிகளில் ஆர்வமுள்ள பயனாளிகள் மற்றும் பயிற்றுவிப்பாளர்கள் எதிர்வரும் 7ஆம் திகதிக்கு முன்னதாக பிரதேச செயலக திட்டமிடல் பிரிவில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கோப்பாய் பிரதேச செயலர் கேட்டுள்ளார். (201-72)

மீள் எழுச்சித் திட்டத்துக்கு கிராமம் தெரிவாகியது

நல்லூர்,ஓக.1

பிரதேச ரீதியாக மீள் எழுச்சித் திட்டத்தில் சமூக முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் வாழ்வாதாரத் திட்டச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த நல்லூர் பிரதேச செயலக பிரிவில் ஜே/125 கிராம அலுவலர் பிரிவின் கொக்குவில் மேற்கு கிராமம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. (203-111)

அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,ஓக.1

சன்மார்க்க மகா வித்தியாலயத்தில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் யாழ்.வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர் சேவை வகுப்பு I, வகுப்பு 2-I தரத்தினைச் சேர்ந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களைச் சுயமாகத் தயாரித்து எதிர்வரும் வியாழக்கிழமைக்கு முன்னர் வலயக் கல்விப் பணிமனைக்கு அனுப்பிவைக்குமாறு யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (204)

நிஷாவால் பாதிக்கப்பட்டோருக்கு உணவல்லாத பொருள்கள்

யாழ்ப்பாணம்,ஓக.1

தென்மராட்சிப் பிரதேசத்தில் நிஷா புயலினால் பாதிக்கப்பட்ட மிகவும் வறுமை நிலையில் உள்ள குடும்பங்களுக்கு உணவுப் பண்டமல்லாத பொருள்கள் வழங்கப்பட்டன.

'கெயர்' நிறுவனத்தினரால் வழங்கப்பட்ட 250 பொதிகள் பிரதேச செயலக சமூகசேவைகள் பிரிவினரால் வழங்கப்பட்டன.

பாதிக்கப்பட்டவர்களில் தெரிவுசெய்யப்பட்ட 250 குடும்பங்களுக்கு உடுபுடைவைகள், பாத்திரங்கள் அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டன. (201-207)

பிரிவுபசார விழா

யாழ்ப்பாணம்,ஓக.1

கைதடி ஆயுள்வேத போதனா வைத்தியசாலையின் ஆயுள்வேத மாணவர்களால் நடத்தப்படும் பிரிவுபசார விழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது. (204-288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலி.மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் கர்ப்பிணிகளுக்குச் சுகாதாரப் பொதி வழங்கல்

யாழ்ப்பாணம், ஓக.01

கர்ப்பிணித் தாய்மாருக்கான சுகாதாரப் பொதி வழங்கலும் - டெங்கு ஒழிப்புத் தொடர்பான மாபெரும் சிரமதானமும் இன்று சனிக்கிழமை காலை 8 மணி முதல் வலி. மேற்குப் பிரதேசத்தில் இடம்பெறவுள்ளன.

வலி.மேற்கு சுழிபுரம் பிரதேச சபைச் செயலாளர் சு.புத்திசிகாமணி தலைமையில் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

மேற்படி நிகழ்விற்கு யாழ்.வை.எம்.சீ. ஏ. தலைவரும் புத்தூர் மெதடிஸ்த வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியுமான டாக்டர் ரி.டபிள்யூ.ஜெயகுலராஜா பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார்.

உள்ளூராட்சி வாரப் பெருவிழாவினை முன்னிட்டு காலை 8 மணிக்குச் சங்கா னைப் பிரதேச மயானப் பகுதியும் முதலியார் குளப் பகுதிச் சுற்றாடலும், வழுக்கையாற் றுப் படுக்கையில் திண்மக்கழிவுகளும் முற்றாக அகற்றப்படும்.

இந்நிகழ்வில் யாழ்.வை.எம்.சீ.ஏ. அங்கத்தினர், வட்டு. உப அலுவலக ஊழியர்கள், சன சமூக உறுப்பினர்கள், மானிப்பாய் மேற்கு சம்மேளன உறுப்பினர்கள், சுகா தாரத் தொழிலாளிகள் கலந்து கொள்வர்.

இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினர்களாக யாழ்.குரு முதல்வர் அருட்பணி எஸ். பி.நேசகுமார் அடிகளாரும்-

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தினேஸ் ஜெயக்குமாரனும் கலந்து கொள்வர்.

அதனைத் தொடர்ந்து - வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட 4 சிறார்களுக்கும், 45 கர்ப் பிணித் தாய்மாருக்குமான சுகாதாரப் பொதியினை பிரதம விருந்தினர் டாக்டர் ரி. டபிள்யூ. ஜெயகுலராஜா வழங்கிக் கௌரவிப்பார். (9-302)

மரண அறிவித்தல்

அகஸ்ரின் கிறிசான்

(பழைய மாணவன், யா/பரிஜோவான் கல்லூரி, மருத்துவபீட மாணவன், பெல்றுஸ் பல்கலைக்கழகம், ரஷ்யா)

யாழ்ப்பாணம், குருநகரைப் பிறப்பிடமாகவும், கண்டி வீதி, சுண்டுக்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் அகஸ்ரின் கிறிசான் 18.07.2009 சனிக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் அந்தோனிப்பிள்ளை அகஸ்ரின் (ஆசிரியர், பரிஜோவான் கல்லூரி) - கிறசன்ஸியா (கிளி) தம்பதியினரின் அன்பு மகனும் அடம்சுமித் (அவுஸ்திரேலியா), தனுஜா, கீர்த்திகா (மாணவிகள், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற பிலிப் பிரகாசராசா மற்றும் காணிக்கை மரியை, காலஞ்சென்றவர்களான அகஸ்ரின் அந்தோனிப்பிள்ளை, திரேசம்மா (பிள்ளைமுத்து) ஆகியோரின் அன்புப் பேரனும் பிரான்சிஸ் (இளைப்பாறிய ஊழியர், ரயில்வே திணைக்களம்), மரியதாஸ் (இளைப்பாறிய ஊழியர், மரக்கூட்டுத்தாபனம்), கிறிஸ்தோப்பர் (ஆசிரியர், யா/ஒஸ்மானியா கல்லூரி), வோல்ரர் (ஜேர்மனி), இம்மனுவேல் (ஜேர்மனி), திருமதி சுகர்ணா-எட்வேட், திருமதி மேரி விக்கியானா-றஞ்சன் ஆகியோரின் பெறாமகனும் திருமதி அன்ரனிஸ்ரா அன்ரனி, காலஞ்சென்ற கெல்வின் மற்றும் மார்க்கபலோ (பிரான்ஸ்), ஜிம்பிறவுண் (பிரான்ஸ்) ஆகியோரின் மருமகனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (01.08.2009) சனிக்கிழமை பி.ப 3 மணிக்கு யாழ்.புனித மரியாள் பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

18, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தகவல்:
தொலைபேசி இல: 222 6927 (87483) அ.அகஸ்ரின் (தந்தை).

பாராட்டி வாழ்த்துகின்றோம்

2009ஆம் ஆண்டுக்கான வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் யாவும் மன்னாரில் நடைபெற்றபோது இதில் பங்குபற்றி உடற்பயிற்சிப் போட்டியில் மூன்றாம் இடத்தையும் மெய்வன்மைப் போட்டிகளில் 15 பதக்கங்களையும் பெற்றுக்கொண்ட எமது பாடசாலை மாணவர்களுக்கு இலவச பிரயாண வசதிகளையும் உணவையும் வழங்கி உதவிய சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் உயர்திரு. கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களைப் பாராட்டி வாழ்த்தி நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யா/இளவாலை கன்னியர் மடம் ம.வி.
சி/559988 பாடசாலைச் சமூகம்

நன்றி நவிலல்

மிருசுவில் படித்த மகளிர் திட்டத்திலுள்ள துர்க்கை அம்மன் கோயிலுக்குச் செல்லும் மருதங்குளம் வீதியை மீண்டும் பொதுமக்களின் பாவனைக்குத் திறந்து விடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்ட, ஈ.பி.டி.பி யின் செயலாளர் நாயகமும், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு ஆலயப் பரிபாலன சபையின் சார்பிலும் மிருசுவில் பகுதி மக்களின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

யாழ். குருநகர்ப் பகுதி மக்களும் இக்கோயிலுக்குச் சென்று தீமித்தல், தூக்குக் காவடி எடுத்தல் போன்ற நேர்த்திக் கடன்களை நிறைவேற்றி வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

சீ. நவரத்தினக் குருக்கள் - பிரதம ஆலய பரிபாலகர்.
சி-559997

இலங்கை வங்கியை வாழ்த்துகின்றோம்

70 ஆண்டுகளை உன்னதமாக நிறைவு செய்த தேசத்தின் வங்கியாம் இலங்கை வங்கியையும் 40 ஆண்டுகளை மகோன்னதமாக நிறைவு செய்த சுன்னாகம் இலங்கை வங்கி மேற்தரக் கிளையின் முகாமையாளர், ஊழியர்கள் அனைவரையும் மேலும் உயர்வு பெற மனமார வாழ்த்துகின்றோம்.

சி-559996

சுந்தர்சன்

உரிமையாளரும், பணியாளர்களும்.

தமிழ் மக்களின் இன்றைய அவலநிலைக்கு கூட்டமைப்பே பதில் சொல்ல வேண்டும் கூறுகிறார் ஆனந்தசங்கரி

"தமிழ் மக்களின் இன்றைய அவல நிலைக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே பதில் சொல்ல வேண்டும். தமிழர்களின் முதல் எதிரி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பே"

இவ்வாறு ஜனநாயக தமிழர் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்த அறிக்கையில் கூறப்பட்டவை வருமாறு:

இலங்கைத் தமிழர்களின் இயல்பு வாழ்க்கையைச் சீரழித்து, அவர்களை அநாதைகளாகவும், விதவைகளாகவும், ஊனமுற்றோர்களாகவும் ஆக்கி அகதி முகாம்களுக்குள் முடக்கியுள்ள பாவத்தையும், பழியையும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பே ஏற்கவேண்டும்.

புலிகளின் பிடியில் இருந்து அப்பாவித் தமிழர்களை விடுவிக்க முயற்சிக் காமல் புலித்தலைமைகளைக் காப்பாற்றவே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாடுபட்டது. ஐரோப்பிய ஒன்றியம், ஐ.நா. என்பன எவ்வளவோ வேண்டியும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மாத்திரம் யுத்தத்தை நிறுத்தும் படி கோரி, பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பாவிக்கும் புலிகளின் தந்திரத்துக்குத் தாளம் போட்டது.

இதனால் தமிழ் மக்கள் உயிர்களையும், சொத்துக்களையும், இருப்பிடங்களையும், உறவுகளையும் இழந்துள்ளனர். என்றோ ஒருநாள் முகாம்களில் இருந்து விடுதலைக்குத் திரும்பும்போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தவறுதலான அணுகுமுறைகளை மக்கள் புரிந்துகொள்வர். புலிகளின் பிடியில் இருந்து நாங்கள் விடுபட்டிருந்தால் இந்த இழப்புக்களைத் தவிர்த்திருக்கலாம் என உணர்ந்து கொள்வர்.

தமிழர்களின் உயிர்களும் உடைமைகளும் காவு கொள்ளப்படுவதற்குக் காரணமாகவிருந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருக்கு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு இணைந்து கொள்ள எவ்வித அருகதையும் கிடையாது. அவ்வாறு இணைந்தால் உயிரிழந்த, காயமடைந்த, அகதிகளாக்கப்பட்ட தமிழர்கள் எங்களை மன்னிக்கமாட்டார்கள்.

ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை, புலிகளை ஏகப் பிரதிநிதிகளாகக் கொண்டோர் குறையாக எடைபோடக் கூடாது. மேயர் பதவிகளுக்காகவோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளுக்காகவோ தமிழ்க் கூட்டமைப்பைப் போல் விலை போக ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புத் தயாரில்லை. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை ஒரு தடியால் தொடுவதற்குக் கூட நாங்கள் தயாரில்லை.

புலிகள் அழிந்து விட்டதால் புலிகளின் பிரதிநிதிகள் எனக் கூறியிருந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எம். பிக்கள் கௌரவமாக பதவி விலக வேண்டும். உயிருக்கு அச்சுறுத்தல் இருந்த போதும் ஜனநாயகத்தைக் காப்பாற்ற ஐந்து வருடம் தலையாக நின்று போராடினேன். இதனால் துரோகி என விமர்சிக்கப்பட்டேன். ஆனால், நான் இன்று சரியான பாதையில் உள்ளேன். அதை நிரூபித்தும் விட்டேன்- என்றார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் ஏன் கூட்டுச் சேரவில்லை

ஆனந்தசங்கரி பதில்

தமிழர் விடுதலைக் கூட்டணி அகிம்சைக்கும், ஜனநாயகத்திற்கும் கட்டுப்பட்ட அமைப்பாகும். இதுவே தந்தை செல்வா காட்டிய வழியாகும். ஜனநாயக கோட்பாடுகளுக்கு கட்டுப்பட்டே 1983ஆம் ஆண்டு அன்றைய அரசு நாடாளுமன்ற கால எல்லையை தேர்தல் வைக்காமல் மேலும் 6 ஆண்டுகளுக்கு நீடித்த போது த.வி.கூ. நாடாளுமன்ற உறுப்பினர்கள் 18 பேரும் தமது பதவிகளை இராஜினாமா செய்து எமது கட்சிக்கு புகழைத் தேடினோம். ஆனால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு 22 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் மோசடிமூலம் தெரிவாகியும் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் இன்னும் தம் பதவியில் ஒட்டிக்கொண்டுள்ளனர். விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்று கூறி நாடாளுமன்றம் சென்றவர்கள் இன்று விடுதலைப்புலிகள் அழிக்கப்பட்ட மறுநாளே இராகத்தை மாற்றி ஒற்றுமை, சமஷ்டி, நாட்டின் இறைமைபற்றி பேச ஆரம்பித்துள்ளனர். இவர்களுக்கு நான் இறுதியாக வெளியிட்ட பகிரங்க வேண்டுகோளின் (11.01. 2009) கடைசிப் பந்தியை இங்கே தந்துள்ளேன்.

விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கைவிடுவார்களேயானால், அவர்கள் அவ்வாறு செய்து அரசுடன் ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஒரு தீர்வைக் காணலாம். அத் தீர்வானது சகல இன மக்களும் சமமாக எதுவித பாகுபாடுமின்றி சகல உரிமைகளையும் அனுபவிக்கக் கூடிய ஒரு தீர்வாக அமைய வேண்டும். அவ்வாறு செய்யத் தவறின், "கறையான் புற்றெடுக்க பாம்பு குடிகொண்ட" கதைபோல பழி பாவங்களுக்கு அஞ்சாத கொள்கையில்லாத சிலர் அதிகாரத்தைக் கைப்பற்ற வழி வகுத்துக் கொடுத்ததாக அமையும். இலங்கை அரசுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் தமிழ் மக்கள் எண்ணெய்ச் சட்டியில் இருந்து நெருப்புக்குள் விழ விடாது பாதுகாக்க வேண்டிய தார்மீகக் கடமை உண்டு. த.தே.கூ நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய தமது கடமையில் இருந்து தவறிவிட்டார்கள் என நான் விசுவாசமாக நம்புவதால் அவர்கள் தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். என்னைப் பொறுத்தவரையில் எனக்கு எதுவித பதவியிலும் அக்கறையில்லை என்பதையும், எனது முழு அக்கறையும் கடந்த கால் நூற்றாண்டு காலமாக துன்பத்தின் மத்தியில் வாழ்ந்து வரும் எம் மக்களுக்குப் பணியாற்றுவது என்பதே.

மக்கள் உதயசூரியனுக்கு வாக்களித்து தமது பிரச்சினைகளைத் தீர்த்து வைக்குமாறு ஆணைதந்தால் என் உயிர் உள்ளவரை மக்களின் நலனுக்காகப் பாடுபடுவேன்.

வீ.ஆனந்த சங்கரி
தலைவர், தமிழர் விடுதலைக் கூட்டணி

உங்களுக்குக் கிடைத்துள்ள கடைசிச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வாக்களிப்பீர் உதய சூரியனுக்கே!
அகிம்சையின் அடையாளம் உதயசூரியன்.

தமிழர் விடுதலைக் கூட்டணி

வீ. ஆனந்தசங்கரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.மாநகர சபைத் தேர்தலில் சுயேட்சைக்குழு –1 இன் நிலைப்பாடு என்ன?

10 கேள்விகளுக்கு அதன் முதன்மை வேட்பாளர் வழங்கிய பதில்கள் இங்கே

கேள்விகள்	கேள்வி 1: நீங்கள் தேர்தலில் வெற்றி பெற்றால் என்ன செய்யப் போகிறீர்கள்?	கேள்வி 2: மாநகர எல்லைக்குட்பட்ட வீதிகள், சில பிரதேசங்கள் பாதுகாப்புக் காரணங்களுக்காக மூடப்பட்டுள்ளன, இவற்றைத் திறக்க நடவடிக்கை எடுப்பீர்களா?	கேள்வி 3: மக்களின் நடமாடும் சுதந்திரம் கூட கட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இத்தேர்தல் நடைபெறுகிறது. இது பற்றி என்ன கூறுகிறீர்கள்?	கேள்வி 4: தற்போது யுத்தம் முடிவடைந்து விட்டது. இலங்கை அரசாங்கம் தமிழர்களுக்கு உரிமைகளை வழங்கும் என நினைக்கிறீர்களா?	கேள்வி 5: யாழ்.மாநகர சபையை அபிவிருத்தி செய்வதற்கான திட்ட வரைபு ஏதேனும் உங்களிடம் உள்ளதா?	கேள்வி 6: உங்களது திட்டங்களுக்குரிய நிதி மாநகரசபையிடம் உள்ளதா? இல்லையென்றால் எவ்வாறு நிதியைத் திரட்டப் போகிறீர்கள்?	கேள்வி 7: திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பாக தங்களிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா?	கேள்வி 8: நீர் வழங்கல், வடிகாலமைப்பு என்பன தற்போது பிரச்சினையாக உள்ளன. இவற்றைச் சீராக்க ஏதேனும் திட்டம் தங்களிடம் உள்ளதா?	கேள்வி 9: யாழ்ப்பாணத்தில் குறிப்பாக மாநகர சபைப் பகுதியில் நிலத்தடி நீர் மாசடைந்து வருவதாக ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. இதனைத் தடுப்பதற்கு என்ன செய்யப் போகிறீர்கள்?	கேள்வி 10: மாநகரசபைப் பகுதி முழுவதும் இப்போது வருடம் முழுவதும் நுளம்புத் தொல்லை பெருகியுள்ளது. இதனால் டெங்கு போன்ற நோய்கள் பரவும் அபாயமுள்ளது. இது போன்ற சுகாதாரப் பிரச்சினைகளைத் தடுப்பதற்கு ஏதேனும் திட்டம் தங்களிடம் உள்ளதா?

பொலனி சபரியால்

01.எமது ஒரே நோக்கம் அபிவிருத்திக்குக் கிராமம் போல் காட்சியளிக்கும் யாழ்.நகரை 21 ஆம் நூற்றாண்டின் விஞ்ஞான வளர்ச்சிக்கேற்றவாறு எமது பதவிக்காலத்தில் அபிவிருத்தி செய்வதே எமது நோக்கம்.

02. மாநகர எல்லைக்குள் மூடப்பட்டுள்ள வீதிகளைத் திறக்க ஏற்பாடு செய்வோம். அதற்காகக் குரல் கொடுப்போம், வீதித் தடைகளை அகற்றி மக்கள் சுதந்திரமாக நடமாடுவதற்கு எம்மால் முடிந்தளவு அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். மாநகர சபையில் தீர்மானம் நிறைவேற்றுவோம்.

03. உண்மையில் இத்தேர்தல் நடத்தக் கூடிய பொருத்தமான கால கட்டமல்ல இது. மக்களின் சுதந்திரம் மறுக்கப்பட்ட நிலையில் இத்தேர்தல் நடைபெறுகின்றது. நாம் பங்குபற்றாவிட்டால் தமிழர்களின் தீர்வுப் பிரச்சினைகளைத் தப்பான வழியில் திசைதிருப்ப அரச முயற்சிக்கக் கூடும்.

04. நாம் யாழ்.மாநகரசபைத் தேர்தலில் போட்டியிடுவது யாழ்ப்பாண நகரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்குடன்தான். ஆனால் எம்மால் முடிந்தளவுக்கு தமிழர்களின் அபிலாஷைகளை வெளியுலகிற்கு எடுத்துச்சொல்ல நடவடிக்கை எடுப்போம்.

05. ஆம். எமது இருபது அம்சத் தேர்தல் விஞ்ஞாபனம் தான் எமது திட்ட வரைபு.

06. இந்தத் திட்டங்களுக்கு நாங்கள் மாநகரசபை வருமானத்தை மட்டும் நம்பியிருக்கவில்லை. சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்து அவர்களது ஆதரவுடன் தான் திட்டங்களை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம். யாழ்.மாநகர அபிவிருத்திக்கு அவர்கள் உதவுவார்கள் என்பதை அவர்களது சந்திப்புகள் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது.

07. எமது இருபது அம்சத் திட்டத்தின் நான்காவது விடயமாக இதைக் கூறியுள்ளோம். திண்மக்கழிவு மூலம் கூட்டுப்பசளையைத் தயாரித்து அதன் மூலம் மாநகர சபையயின் வருமானத்தைப். பெருக்குவதுடன் சுற்றாடலையும் பாதுகாப்பதே எமது திட்டம்.

08. எமது இருபது அம்சத்திட்டத்தின் மூன்றாவது விடயம் இதைப்பற்றிக் கூறுகிறது.

09. எமது இருபது அம்சத் திட்டத்தின் பன்னிரண்டாவது விடயம் சீரான குடிதண்ணீர் திட்டத்தை அமுல்ப்படுத்துவதுடன் வரட்சியைப் போக்கவும் நடவடிக்கையெடுப்போம்.

10. நுளம்புத் தொல்லையை நீக்குவதற்கு விசேட திட்டங்களை நாம் மேற்கொள்வோம்.

யாழ்ப்பாணம், வவுனியா தேர்தல்களில் அரசு வெற்றி பெற்றால் தமிழ் மக்கள் துரதிஷ்டமான நிலைக்குத் தள்ளப்படுவார்கள்

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் கூறுகிறார்

யுத்தம் முடிவிற்கு கொண்டுவரப்பட்டதுடன் தமிழ் மக்களின் சகல பிரச்சினைகளும் முடிவடைந்துவிட்டதாக சர்வதேசத்திற்கு வெளிக்காட்டுவதற்கே மஹிந்த ராஜபக்ஷவின் அரசு யாழ்.மாநகர சபை, வவுனியா நகரசபை தேர்தல்களை அறிவித்துள்ளது.

இந்த இரு தேர்தல்களிலும் எவ்வாறாயினும் வெற்றி பெற்றே ஆகவேண்டுமென்ற எண்ணத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் களத்தில் குதித்துள்ளது. எவ்வழியிலாவது இந்த அரசு இத்தேர்தல்களில் வெற்றிபெற்றால் தமிழ் மக்கள் மிகவும் துரதிர்ஷ்டமான நிலைக்குத் தள்ளப்படுவார்கள் என்பது உறுதியாகும் என ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினரும் யாழ். மாநகர சபை, வவுனியா நகர சபைத் தேர்தலுக்கான ஐ.தே.க. அதிகாரம் பெற்ற பிரதிநிதியுமான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இன்னும் வவுனியா அகதி முகாம்களில் கடும் இன்னல்களுக்கு முகம் கொடுத்து, கவலைக்கிடமான நிலையில், விருப்பமில்லாது வாழ்ந்துகொண்டிருக்கும் 3லட்சத்துக்கும் அதிகமான அகதிகள் மிகவும் விருப்புடன், சந்தோஷமாக வாழ்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்த அரசால் இந்தத் தேர்தல் பெறுபேறுகள் பாவிக்கப்படும்.

தமிழ் மக்களின் அரசியல், சமூக உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கான அரசியல் தீர்வொன்றைப் பெற்றுத்தருவதை நிராகரிப்பதற்கு அரசால் இந்தத் தேர்தல் பெறுபேறுகள் பயன்படுத்தப்படும்.

தமிழ் மக்கள் முகம் கொடுக்கும் சட்டவிரோதமான கடத்தல், கப்பம் பெறுதல் போன்றவை தொடர்பான உண்மை நிலைவரங்கள், அரசால் இந்தத் தேர்தல் பெறுபேறுகளைக் காட்டி மறைக்கப்படலாம்.

இந்த அரசு தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதாக முதலைக் கண்ணீர் வடிக்கின்றது. ஆயினும் உண்மையாக இதுவரை எந்தவித நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு முன்வரவில்லை.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும், அவர்களது மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் அவர்களது மனிதாபிமான தேவைகள் தொடர்பாகவும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வைப் பெற்றுத்தருவது தொடர்பாகவும் அதிகாரத்தில் இருக்கும்போது சரி, எதிர்க்கட்சியாக இருக்கும்போது சரி அதற்காக உண்மையாக செயற்பட்டது ஐக்கிய தேசியக் கட்சி மட்டுமேயாகும்.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு உண்மையான, நம்பத்தகுந்த ஒரேயொரு கட்சியென்றால் அது ஐக்கிய தேசியக் கட்சி மட்டுமேயாகும். தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் உறுதிப்படுத்தவும் செயற்படும் ஒரே கட்சி ஐக்கிய தேசிக் கட்சியாகும். அரசியல் தீர்வு தொடர்பான தெளிவான விளக்கம் இருப்பதும் ஐக்கிய தேசியக் கட்சியிடமேயா கும். ஐக்கிய தேசியக் கட்சி அறிமுகப்படுத்திய 13ஆவது சரத்தை நடை முறைப்படுத்த இந்த அரசு தயாராய் இல்லை. சுதந்திர மானதேர்தல் ஆணைக் குழு, சுதந்திரமான அரசவேலை ஆணைக் குழு, சுதந்திரமான பொலிஸ் ஆணைக்குழு என்ற 17ஆவது சரத்தை நடைமுறைப்படுத்த இந்த அரசு முன்வரவில்லை.

ஊடக சுதந்திரத்தை, மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு இந்த அரசு செயற்படவில்லை. 2006ஆம் ஆண்டிலிருந்து ஊடகவியலாளர்கள் 9 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர். வெள்ளை வான்களில் மக்கள் பலர் கடத்தப்பட்டுள்ளனர்.கப்பம் பெறுதல், பல மிரட்டல்கள் இடம்பெற்றுள்ளதைக் கேட்கக்கூடியதாகவிருந்தது.

இந்தத் தேர்தலில் நடைமுறை அரசு வெற்றிபெற்றால் மேலும் மேலும் தமிழ் மக்களின் உரிமைகள் பறிக்கப்படும். தமிழ் மக்கள் பெரும்பாலும் கொலைசெய்யப்படுவர். தமிழ் மக்கள் அடிமைகளாக்கப்படுவர்.

தமிழர்களாகிய நீங்களே உங்கள் கழுத்திற்கு தூக்குக்கயிற்றை மாட்டிக்கெள்ள விரும்புகின்றீர்களா???

உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை இருளாக்க விரும்புகின்றீர்களா???

புத்திசாலித்தனமாக சிந்தியுங்கள்.....

தமிழ் மக்களுக்கு ஏற்படும் துன்பங்கள், துயரங்கள், இன்னல்கள் என்பவற்றிற்கு எதிராக அமைதியாக உங்கள் எதிர்ப்பை வெளிக்காட்டவுள்ள ஒரேயொரு வழி இந்தத் தேர்தலாகும்.இதனால் இந்த இரு தேர்தல்களும் ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தலுக்கு சமமான முக்கியத்துவம் வாய்ந்ததாகும். நீங்கள் இந்தத் தேர்தலின்போது உங்கள் வாக்கை பயன்படுத்தாது மட்டும் இருந்துவிடாதீர்கள். அவ்வாறு நடந்தால் அரச அனுசரணையாளர்களால் உங்கள் வாக்கு களவாடப்படலாம். அவற்றை உங்களுக்கு எதிராகப் பயன்படுத்தலாம்.

எனவே 2009 ஓகஸ்ட் 08ஆம் திகதி அதிகாலையில் சென்று உங்கள் பெறுமதியான வாக்கை ஐக்கிய தேசியக் கட்சிக்கு அளியுங்கள். ஐக்கிய தேசியக் கட்சிக்கு நீங்கள் ஒவ்வொருவரும் அளிக்கும் வாக்கு இலங்கை தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க வழங்கும் வாக்காகும். தமிழ் மக்களுக்கு ஏற்படும் அநீதிகளுக்கு எதிராக குரல் கொடுக்க ஒரு நாட்டிற்குள் சம அந்தஸ்துடைய கௌரவமான இலங்கையராக வாழ்வதற்கு விரும்பின் ஐக்கிய தேசியக் கட்சியுடன் கைகோருங்கள்.

யாழ்.மாநகர சபை, வவுனியா நகர சபை தேர்தலில் போட்டியிடுவதற்கு சிறந்த குழு நியமிக்கப்பட்டுள்ளது. உங்கள் சரியான தீர்வு தமிழ் மக்களின் எதிர்காலத்தை சுபீட்சமாக்கும்.

மாநகர சபைத் தேர்தலில் 70 நிலையங்களில் ஒருலட்சத்து 417 வாக்காளர்கள் வாக்களிப்பர்

யாழ்ப்பாணம் ஓக. 1

எதிர்வரும் 8ஆம் திகதி நடைபெற வுள்ள மாநகர சபைத் தேர்தலுக்கென 70 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இந்தத்தேர்தலில் மொத்தம் ஒருலட்சத்து 417 வாக்காளர்கள் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

வாக்களிப்பு நிலையத்தின் அமைவிடமும் அவற்றில் வாக்களிக்கவுள்ளோரின் எண்ணிக்கையும் வருமாறு:

வாக்களிப்பு நிலையத்தின் அமைவிடம்

கொட்டடி நமசிவாய வித்தியாலயம் யாழ்ப்பாணம் (மண்டப இல.1)-1722, புனித ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை பிரதான வீதி, யாழ்ப்பாணம் (மண்டப இல.-1)1620, புனித ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை பிரதான வீதி, யாழ்ப்பாணம் (மண்டப இல.-2)-714, புனித ஜேம்ஸ் பெண்கள் ஆரம்ப பாடசாலை , யாழ்ப்பாணம்- 1635, புனித ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை பிரதான வீதி, யாழ்ப்பாணம் (மண்டப இல.-1)-1714, புனித ஜேம்ஸ் ஆண்கள் வீதி, யாழ்ப்பாணம் (மண்டப இல.-2)-1629, புனித றொக் வித்தியால யம், யாழ்ப்பாணம் (மண்டப இல.1) -1225, புனித றொக் வித்தியாலயம் யாழ்ப்பாணம் (மண்டப இல.2)-1512, புனித சாள்ஸ் மகாவித்தியாலயம், யாழ்ப்பாணம் (மண்டப இல:-1)- 1710, யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர்மடம் (மண்டப இல:-1) -1129, யாழ்ப்பாணம் திருக் குடும்பக் கன்னியர்மடம் (மண்டப இல:-2)-913, புனித சாள்ஸ் மகாவித்தியாலயம், யாழ்ப்பாணம் (மண்டப இல:- 2)-1515, புனித பத்திரிசியார் கல்லூரி யாழ்ப்பாணம் (மண்டப இல:-1)- 1152, புனித பத்திரிசியார் கல்லூரி யாழ்ப்பாணம் (மண்டப இல:-2) -1009, புனித பத்திரிசியார் கல்லூரி யாழ்ப்பாணம் (மண்டப இல:-3)-1252, பரியோவான் கல்லூரி சுண்டுக்குளி (மண்டப இல:-1)-723, சுண்டுக்குளி பெண்கள் கல்லூரி (மண்டப இல:-1)-1148, சுண்டுக்குளி பெண்கள் கல்லூரி (மண்டப இல:-2)-937, சுண்டுக்குளி பெண்கள் கல்லூரி (மண்டப இல:-3)-1493, பாஷையூர் புனித அந்தோனியார் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை (மண்டப இல:-1)-1755, பாஷையூர் புனித அந்தோனியார் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை (மண்டப இல:-2)- 1177, கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம் (மண்டப இல:-1)-1027-

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம் (மண்டப இல:-2)-1120, கொழும்புத் துறை புனித யோசப் வித்தியாலயம் (மண்டப இல:-1)-1855, கொழும்புத் துறை புனித யோசப் வித்தியாலயம் (மண்டப இல:-2)-1041, புனித ஜோன் பொஸ்கோ றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை -1490-

லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி, யாழ்ப்பாணம் (மண்டப இல:-1) -791, பரியோவான் கல்லூரி சுண்டுக்குளி (மண்டப இல:-2)-1806, லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி யாழ்ப்பாணம் (மண்டப இல:-2)-1835, புனித மரியாள் வித்தியாலயம் யாழ்ப்பாணம் -1477, யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர் மடம் (மண்டப இல:-3)-525, சன்மார்க்க மகாவித்தியாலயம் யாழ்ப்பாணம் -1637, ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலயம் (மண்டப இல:-1)-824, ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலயம் (மண்டப இல:-2)-1480-

வண்ணார்பண்ணை நாவலர் மகாவித்தியாலயம் -2019, கொட்டடி நமசிவாய வித்தியாலயம் யாழ்ப்பாணம் (மண்டப இல:2)-1236, யா/ நாவாந்துறை றோ.க.த.க பாடசாலை (ஆண்வாக்காளர்கள்) (மண்டப இல.1)- 1919, யா/ நாவாந்துறை றோ.க.த.க. பாடசாலை (பெண் வாக்காளர்கள்) (மண்டப இல-2) - 1750, யா/ ஒஸ்மானியாக் கல்லூரி யாழ்ப்பாணம்-1381, யா/நாவாந்துறை றோ.க.த.க. பாடசாலை (மண்டப இல - 3) - 2680, யா/ வைத்தீஸ்வரா கல்லூரி வண்ணார் பண்ணை (மண்டப இல -1) - 2128, நாவாந்துறை சென். நீக்கலஸ் சனசமூக நிலையம் - 2523, யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி வண்ணார் பண்ணை (ஆண் வாக்காளர்கள்) (மண்டப இல-2)-1804, யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி வண்ணார்பண்ணை (பெண் வாக்காளர்கள்) (மண்டப இல-3) -1533, யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி வண்ணார் பண்ணை (மண்டப இல-4)-1249,

(மிகுதி பின்னர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அகவை எழுபதில் இலங்கை வங்கியும் அதன் வளர்ச்சிப் பாதையும்

ஒரு நாட்டின் வளர்ச்சியில் அதன் முன்னேற்றத்திற்கு முதுகெலும்பாகத் திகழ்வது நிதியியல் சம்பந்தமான கொள்கையும் வங்கி நடவடிக்கைகளும் என்றால் யாரும் மறுத்து உரைப்பதற்கில்லை. அந்த வகையில் நமது நாட்டின் வங்கியியல் வரலாறு பல்வேறுபட்ட அரசியல் மாற்றங்களாலும் உள்நாட்டில் கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நடைபெற்றுவரும் யுத்த சூழ் நிலையாலும் அவ்வப்போது பல படிமானவளர்ச்சிகளுக்கு முகம் கொடுத்து வந்திருக்கிறது. அதிலும் குறிப்பாக அரச வங்கிகளில் ஒன்றான எமது ''இலங்கை வங்கி'' அகவை எழுபதில் தனது வங்கியியல் வரலாற்றில் வைரவரிகளை தடம் பதித்து இன்று தன்னிகரற்ற மக்கள் சேவையால் ''தேசத்தின் வங்கியாளர்'' என்ற மகுட வாசகத்தின் கீழ் நடந்து வந்த பாதையில் கடந்து வந்த நிகழ்வுகளை மீட்டுப் பார்ப்பதிலும் அவற்றை வாடிக்கையாளர்களுடன் பகிர்ந்து கொள்வதிலும் நாம் புளகாங்கிதம் அடைகின்றோம்.

இலங்கை வங்கியின் தோற்றம்

1932ஆம் ஆண்டு இலங்கையில் வணிக வங்கியியல் மற்றும் காப்புறுதி சம்பந்தமான ஓர் ஆணைக்குழுவினை நியமிக்குமாறு ஜோர்ஜ் ஈ.டீ. சில்வாவால் நாடாளுமன்றத்தில் பிரேரணை முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. இவ்வாறு உருவான ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைய 1939 ஒகஸ்ட் முதலாம்திகதி அன்றைய தேசாதிபதி சேர் அன்று கல்டிகொற் அவர்களால் இலங்கை வங்கியின் முதற் கிளை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இக்கிளை இலக்கம் 41, பிறிஸ்டல் வீதியில், கோட்டையில் 'City Office' என்னும் நாமத்துடன் விளங்குகின்றது.

வளர்ச்சிப் பாதையில் இலங்கை வங்கி

இன்று இலங்கையில் மட்டுமல்லாது இலங்கை வங்கியின் கிளைகள் லண்டன், மாலைதீவு, இந்தியா ஆகிய வெளிநாடுகளில் மூன்று சர்வதேசக் கிளைகளைக் கொண்டுள்ளது. உள்நாட்டில் 305 கிளைகளைக் கொண்டும் 110 நீடித்த விசேட கருமபீடங்களை கொண்டும் இயங்கும் இலங்கை வங்கியானது தலைநகரில் உயர்ந்த 30 மாடிகளைக் கொண்ட கட்டடத்தில் தனது தலைமைக் காரியாலயத்தைக் கொண்டும் இயங்குகின்றது.

வன்னியில் இயங்கி வந்த மூன்று கிளைகள் தவிர்ந்த அனைத்துக் கிளைகளும் கணனி வலைப் பின்னலுக்குள் இணைக்கப்பட்டு நவீன மயப்படுத்தப்பட்டு சகல கிளைகளும் ஒரே வங்கி நடைமுறைக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. நாட்டில் கணனி மயப்படுத்தப்பட்ட அதிகூடிய கிளைகளைக்கொண்ட வங்கி இலங்கை வங்கியே என்ற பெருமையையும் இன்று கொண்டுள்ளது. வேறு பொருளில் கூறுவதாயின் அதிகூடிய சொத்துக்களைக் கொண்டதும் அதிக எண்ணிக்கையான ஊழியர்களைக் கொண்டதும் அதிக எண்ணிக்கையான வாடிக்கையாளர்களைக் கொண்டதும் இலங்கை வங்கிதான் என்பது மறுத்துரைக்க முடியாத உண்மையாகும்.

யாழ்.குடாநாட்டு மக்களும் இலங்கை வங்கியும்

யாழ்.குடாநாட்டில் முதலாவதும் இலங்கை வங்கிக் கிளைகளுள் ஐந்தாவதுமாகிய யாழ். அதிமேற்தரக் கிளையானது 02.02.1945 ஆரம்பிக்கப்பட்டது. இக்கிளையானது கொழும்பு மாநகரக் கிளை (City Office), கண்டிக்கிளை, பெற்றா (Pettah Branch) மற்றும் காலிக் கிளை களையடுத்து எமது யாழ். கிளை ஆரம்பிக்கப் பட்டது. இக்கிளை ஆரம்பத்தில் யாழ். மின்சார நிலைய கட்டடத்திற்கு முன்பாக யாழ். ஆஸ்பத்திரி வீதியில் ஒரு சிறிய கட்டடத்தில் (முன்பு பரணி ஹோட்டல் இருந்த கட்டடத்தில்) மணிக்கூட்டுக்கோபுர வீதிக்கு முன்னால் (இவ்வீதி பின்னாளில் நிரந்தரமாக மூடப்பட்டு யாழ். வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவுக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது) ஆரம்பிக்கப் பட்டது. இதன் ஆரம்ப முகாமையாளராகப் பணியாற்றிய யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த சி.லோகநாதன் என்பவரே பின்நாளில் இலங்கை வங்கியின் முதல் இலங்கையரான பொதுமுகாமையாளர் பதவி வகித்த பெருமையையும் ஏற்படுத்திக் கொடுத்தார். இது இலங்கை வங்கி வரலாற்றில் யாழ். மக்களுக்கு கிடைத்த பெருமையும் கூட. அதனையடுத்து பருத்தித்துறையில் குடாநாட்டின் இரண்டாவது கிளையும் இலங்கை வங்கியின் 28ஆவது கிளையுமாக 18.02.1959ஆம் ஆண்டு இவரால் திறந்துவைக்கப் பட்டது.

ஆரம்பத்தில் யாழ்.குடாநாட்டில் யுத்த சூழ் நிலையால் காகிதாதிகள், இயந்திர உபகரணங்கள் போன்ற வசதிகள் அற்ற நிலையில் வங்கியாளர்களின் அர்ப்பணிப்பான சேவையால் ஊரடங்கு, ஹர்த்தால்கள், மின்சாரமின்மை, பொருளாதாரத்தடை போன்ற பின்னடைவுகள் இருந்த போதிலும் ஆற்றிய பணியினை மக்கள் மறப்பதற்கில்லை. வங்கிகளில் திரவப் பணம் அற்ற நிலையிலும் யாழ்.வங்கி அதிகாரிகளின் புத்தி சாதுரியமான நடவடிக்கைகளால் கொடுப்பனவுக் கட்டளை வங்கியியல் (Pay Order Banking) நடத்தப்பட்டு வங்கிப் பணிகள் நடத்தப் பட்டன. போக்குவரத்து சீரற்ற நிலையிலும் துவிச்சக்கர வண்டிகளில் பயணம் செய்து பதவி வேறுபாடின்றி வங்கியாளர்கள் தமது பணியினை ஆற்றியமை என்றும் ஒரு வரலாற்று நிகழ்வே. இவ்வாறாக யுத்த சூழ்நிலையிலும் எமது கிளைகள் திறக்கப்பட்டு படிப்படியாக குடாநாட்டில் இன்று மொத்தம் 12 கிளைகளையும், 6 விரிவாக்கற் கிளைகளையும் கொண்டு நம் இலங்கை வங்கி இயங்குகின்றது. மேலும் 3 விரிவாக்கற் கிளைகள் கொக்குவில், நெடுந்தீவு போன்ற இடங்களிலும் மிக விரைவில் ஆரம்பிக்கப்பட இருக்கின்றது.

சமூகப் பணியில் இலங்கை வங்கி உறவுகள்

தானங்களில் சிறந்த தானம் இரத்ததானம். அந்த வகையில் ஆண்டுதோறும் ஒகஸ்ட் மாதத்தில் இலங்கை வங்கியின் உத்தியோகத்தர், ஊழியர்களில் கணிசமானோர் பால் வேறுபாடின்றி இரத்ததானம் செய்வது வழக்கம். அன்றைய தினம் ஏனைய உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் யாழ்.போதனா வைத்தியசாலையின் உட்புற சுற்றாடல்களைச் சுத்தம் செய்வதும், வருடம் தோறும் வைத்தியசாலைக்குத் தேவையான உபகரணங்களில் கணிசமான தொகைப் பணத்தினை செலவிடுவதும் வழமையாகி விட்ட நிகழ்வு. அந்த வகையில் அண்மையில் கூட எமது வங்கியின் தலைவர் டாக்டர் காமினி விக்ரமசிங்க யாழ்நகர் வருகை தந்த போது யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் சென்று அன்பளிப்பினை வழங்கியிருந்தார்.

பலதரப்பட்ட மக்களுக்குமான பணியில் வங்கியின் செயற்பாடுகள்

சிறு குழந்தை தொடக்கம் அக்குழந்தையின் பல்வேறு வளர்ச்சிக்கால செயற்பாடுகளுக்கு ஏற்றவாறு புதிய சேமிப்புத் திட்டங்களை உருவாக்கி அவ்வக் காலங்களில் மக்களிடையே சேமிப்புப் பழக்க வழக்கத்தை ஏற்படுத்தி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் அரிய சேமிப்புக் கணக்குகளான பின்வரும் திட்டங்கள் நன்மை பயக்கக் கூடியதாக அமைந்திருப்பதை குறிப்பிட்டுக் கூறலாம்.

சிறுவர் பொன் அரும்புக் கணக்கு, 14+ சேமிப்புக் கணக்கு, 18+ சேமிப்புக் கணக்கு, மகளிர் பொற் கணக்கு, சாதாரண சேமிப்புக் கணக்கு, சிரேஷ்ட பிரஜைகளுக்கான கணக்கு.

வங்கி திறந்திருக்கும் நேரம் தவிர்ந்த ஏனைய வேளையிலும் சேமிப்பு நடைமுறைக் கணக்குகளில் உள்ள பணத்தினை மீளப் பெற்றுக் கொள்வதற்கு வசதியாக தன்னியக்க பணப் பரிமாற்றம் செய்யும் இயந்திரங்களும் பொருத்தப்பட்டுள்ளன. அதனால் வாடிக்கையாளர்களுக்கு வங்கி இலத்திரனியல் பணப் பரிமாற்ற அட்டைகளை (ATM Card) வழங்கி நவீன வங்கி யுகத்துக்குள் அழைத்துச் சென்றுள்ளது. இந்த நடைமுறை மூலம் 14+ கணக்கு வைத்திருப்பவர்களும் தன்னியக்க பணப் பரிமாற்ற அட்டையை பெற்றுக் கொள்ளும் தகுதியினைப் பெற வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாது வங்கியில் பல் வேறு தரத்திலான கடன் அட்டைகளை வழங்கும் சேவைகள் (Credit Card) முறையினையும் அறிமுகப்படுத்தி மக்கள் தமது பொருள்கள், கொள்வனவிற்கு பணத்திற்குப் பதிலாக இத்தகைய கடன் அட்டைகளை உபயோகிக்கும் நவீன முறைகளையும் அறிமுகப்படுத்தியுள்ளது.

காசோலைகள் துரித முறையில் தீர்வாகும் நடைமுறை

இவைமட்டுமல்லாது வங்கிகள் ஆரம்ப காலத்தில் தமது கிளைகளில் உள்ள கணக்குகளில் வைப்பிலிடும் காசோலைகளை தீர்வாகும் பொருட்டு அவ்வக் கிளைகளுக்கும் ஏனைய வங்கிகளுக்கும் தபாலில் அனுப்பி பின்னர் அக்கிளைகளினதும் வங்கியினதும் அறிவுறுத்தல் கிடைத்த பின்னரே மேற்படி காசோலைகள் தீர்வாகும் நடைமுறை இருந்தது. ஆனால் அந்த நடைமுறை தற்பொழுது முற்றிலுமாக மாற்றி அமைக்கப்பட்டு வைப்பிலிடும் ஏனைய வங்கிகளின் காசோலைகள் Lanka Clear மூலமாக (T+ one day) ஆகக் கூடிய இரு தினங்களுக்குள் என்ற முறையில் தீர்வாகும் நடைமுறை ஏற்பட்டுள்ளது. இதன் யாழ். நகர்க் கிளையின் நிர்வாகியாக இலங்கை வங்கி முன்னாள் உத்தியோகத்தரான எஸ். சிறினிவாசன் வங்கிக் கிளைக்களுக்கு சரியான அறிவுறுத்தல்களைக் கொடுத்து விரைவான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றார். அதனால் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வியாபாரிகள் தமது விற்பனை நடைமுறைகளை கொள்வனவை இலகு நடைமுறையில் அமைத்துக் கொள்ள முடிகின்றது.

தங்க நகை அடகு சேவை

மக்களின் அவசர தேவைகளை பூர்தி செய்யும் நோக்கோடு வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்ட தங்க நகை அடகு சேவை மூலம் துரித கதியில் பணத்தைப் பெற்றுக்கொள்ள வசதியாக தங்க ஆபரணங்களை பிணையாக கொடுத்து அவற்றின் பெறுமதிக்குத் தக்கவாறு கடன் பெற்றுக் கொள்ளும் முறை வாடிக்கையாளர் தேவை கருதியும் சேவை கருதியும் இரகசிமான முறையில் அளிக்கப்பட்டுவரும் இந்தநடைமுறையால் விவசாய அபிவிருத்தி, விற்பனை கொள்வனவுகள், மாணவர் கல்வி சம்பந்தமான கொடுப்பனவுகள், வைத்திய செலவுகள் மற்றும் திடீர் பிரயாண ஒழுங்குகள் மேற்கொள்ள வங்கி வசதி செய்து கொடுத்துள்ளது.

குத்தகை வசதிகள்

வர்த்தகர்களினாலும் தனிப்பட்டவர்களினாலும் உடனடியாக முழுப்பெறுமதியும் ஈடுபடுத்தி வாகனங்களை, இயந்திரங்களை கொள்வனவு செய்ய முடியாத நிலையில் வங்கி அவர்களுக்கு கைகொடுத்து அவர்களின் தேவையை நிறைவேற்றிக் கொடுக்கின்றது. இதனால் பலர் நன்மை பெற்று தமது வாழ்க்கைத் தரத்தில் புதிய தொழில் வாய்ப்புக்களை அமைத்து மகிழ்ச்சியாக வாழ்வதற்கு வங்கி தளம் அமைத்துக் கொடுத்துள்ளது.

கடன் வசதிகள்

இவற்றைவிட கடன் வசதிகள் தற்போதைய தேவைகளை நிவர்த்தி செய்ய பலவகையான கடன் திட்டங்கள், பிணைகள் அடிப்படையாகக் கொண்டு கடன் வழங்கல், நிலையான வைப்புக்கள், சேமிப்புச் சான்றிதழ், காப்புறுதிப்பத்திரம், வாகனம், கட்டடம், இருப்புக்கள் போன்றவற்றை பிணையாகக் கொடுத்து கடன் பெறும் முறை ஆகியனவும் மக்களுக்கு அவர் தம்தேவையை ஈடுசெய்ய வங்கி தளம் அமைந்துள்ளது.

திட்டக் கடன்கள்

நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை மேலோங்கச் செய்யவும் பல்வேறு வகையான திட்டங்களின் கீழ் கடன் வசதிகள் அளிக்கப் பட்டுள்ளன. அந்தவகையில் குறிப்பாக நவோதயா, வறுமையொழிப்புத் திட்டம், சுயதொழில் முயற் சியாண்மைக் கடன் போன்ற பெயர்களில் கால் நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, சிறு வர்த்தகம், மீன்பிடித்தொழில், கைத்தொழில் முயற்சிகள், ஏற்றுமதி மற்றும் உள்நாட்டு நுகர்வுக்கான பயிர்ச்செய்கைகள் போன்ற சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுபவர்களுக்கான குறைந்த வீத வட்டியில் கடன்கள் வழங்கப்படுகின்றன.

ச.நடராஜா
இலங்கை வங்கி, யாழ்.கச்சேரிக் கிளை.

இவ்வாறு தேசத்தின் வங்கியாளராகிய இலங்கை வங்கி நாட்டின் நலன், மக்களின் நலன் கருதி செயல்படுத்தும் திட்டங்கள் மூலம் காலத்திற்குக் காலம் கண்டுவரும் வளர்ச்சியில் நாம் அனைவரும் நனைந்து பயன்பெற்று சுபீட்சமான பாதையில் வாழ இனிவரும் காலம் வழிபிறக்கும். அதனால் அகவை எழுபது என்று சாதாரண காலமல்ல சாதனைகள் படைத்த காலமாகும் என்பது மிகைப்படுத்த முடியாத உண்மை என்பதில் ஐயமில்லை. ✱

MULTIMEDIA COURSES
எண்ணங்களின் பிரதிபலிப்பு
ADV. DIPLOMA IN Digital Pre-press
100% செய்முறை பயிற்சி
DIPLOMA IN Digital Video Production (Audio & Video Editing)
Diploma in Desktop Publishing
PROFESSIONAL Diploma in Graphic Design 4 Months
Advanced Diploma in Macromedia Application
தற்பொழுது பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன
ASIAN - CSC COMPUTER EDUCATION
2C, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021-222 5677
கொழுகாமம் வீதி, நெல்லியடி. 077-3122198

தேவை

புடைவைக் கடையில் வேலை செய்யக் கூடிய ஆண், பெண் விற்பனையாளர்கள் தேவை. புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்கள், பழக விரும்புபவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.
த.சங்கரப்பிள்ளையும் மைந்தர்களும்,
21, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

தவறிவிட்டது

30.07.2009 வியாழக்கிழமை காலை காது கேட்கும் கருவியுடன் சிறிய அலுமினியப்பெட்டி, இணுவிலுக்கும் யாழ்.வீரசிங்கம் மண்டபத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து Dr.நா.சத்திவேல், மஞ்சத்தடி, இணுவில் என்னும் விலாசத்துடன் தொடர்புகொள்ளும். அல்லது 060221 4263 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

யாழ்.நகர் வாக்காளர்களே!

செய்யக் கூடாத அனைத்தையும் செய்துவிட்டு
செப்படி வித்தை காட்டுகிறார்கள்!
சுய அறிவு கொண்ட நாமெல்லாம் ஏமாந்துபோக
என்ன ஏமாளிகளா?
வாக்குச் சீட்டால் பதிலடி கொடுங்கள்!
வீட்டுச் சின்னத்துக்கு வாக்களியுங்கள்!!
10 ஆம் இலக்கத்தையும் பார்த்துக்கொள்ளுங்கள்!!!



கே.என்.கனகரத்தினம்
(விந்தன்)



(87475)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

200 க்கும் அதிகமான தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யக் கோரி 3 நாள்களாக உண்ணாவிரதம்

கொழும்பு, ஒக். 01

கொழும்பு வெலிக்கடைச் சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 200 இற்கும் அதிகமான தமிழ் அரசியல் கைதிகள் கடந்த மூன்று நாள்களாக உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர் என சிறைச்சாலைத் திணைக்களம் தெரிவிக்கின்றது.

இந்தக் கைதிகள் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு பாதுகாப்புச் செயலாளரின் உத்தரவுக்கு இணங்க தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தனர் எனவும், பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் எனவும் சிறைச் சாலைத் திணைக்களத்தின் சிவில் ஆணையாளர் கனத் பெர்ணான்டோ தெரிவித்தார்.

தங்களை விடுதலை செய்யவேண்டும் அல்லது பிணையில் செல்ல அனுமதிக்கவேண்டும். வழக்குகள் தொடரும் பட்சத்தில் அவை மாவட்ட நீதிமன்றங்களுக்கு மாற்றப்படவேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து கடந்த மூன்று தினங்களாக இந்தத் தமிழ் அரசியல் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்களின் கோரிக்கைகள் அமைச்சர்கள், மனித உரிமைகள் ஆணைக்குழு, செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு ஆகியவற்றுக்கு அனுப்புவதற்காக அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன என கைதிகளின் உறவினர்கள் தெரிவித்தனர்.

இவர்களின் நிலைகுறித்து பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் கலந்துரையாடிய பின்னரே உரிய முடிவுகள் எடுக்கப்படும் என நீதி சட்ட மறுசீரமைப்புப் பிரதி அமைச்சர் வீ.புத்திரசிகாமணி தெரிவித்தார்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா நேற்றுக் காலை சுதுமலை அம்மன் ஆலயத்திற்குச் சென்று பூஜை வழிபாடுகளில் கலந்து கொண்ட போது எடுக்கப்பட்ட படம்.

தமிழ் இளைஞர் கொலை; கனடாவில் இருவர் கைது

கொழும்பு, ஒக.01

கனடாவில் தமிழ் இளைஞரான அனுசாந் இந்திரகாந்தன் (வயது 19) படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக கனேடிய பொலிஸார் இரு சந்தேக நபர்களை கைது செய்துள்ளார்கள்.

கனேடிய தமிழ் இளைஞன் இந்திரகாந்தன் கடந்த 20 ஆம் திகதி ஆயுதங்களால் குத்தி படுகொலை செய்யப்பட்டார்.

இது தொடர்பாக, விக்காஸ் தஹாய்யா (வயது 21), அன்ரிக்ஸ் சிங் ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர். நேற்று முன்தினம் வியாழக்கிழமை இருவரும் நீதிமன்றில் ஆஜராக்கப்பட்டனர்.

இதேநேரம் கிரிஸ்ரியன் தனபாலன் என்ற கனேடிய தமிழ் இளைஞனும் (வயது 22) கடந்த ஜூலை 11 ஆம் திகதி கனடாவில் படுகொலை செய்யப்பட்டிருந்தார். எனினும், அந்த இரு படுகொலைகளுக்கும் ஒன்றோடொன்று தொடர்புகள் இல்லை என்று கனேடியா பொலிஸார் தெரிவிக்கின்றனர். (சி)

ஈ.பி.டி.பி.யின் பெயரில் வாக்காளர் அட்டை அபகரிப்பு; விழிப்பாக இருக்குமாறு அமைச்சர் டக்ளஸ் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஒக. 1

ஈ.பி.டி.பி. அமைப்பின் பெயரைக் கூறிக் கொண்டு வாக்காளர் அட்டைகள் சேகரிக்கப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இவ் விடயத்தில் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

சமூக சேவைகள் மற்றும் சமூகநலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்.மாநகரசபைத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படுகின்ற நிலையில் சில மோசடிக் கும்பல்கள் வாக்காளர் அட்டைகளை சேகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர் என முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இவ்வாறான கும்பல்கள் ஈ.பி.டி.பி. கட்சியின் பெயரைக் கூறிக் கொண்டும் இவ்வாறான மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன என்று மேலும் தெரிய வருகின்றது.

எனவே இவ்வாறான செயற்பாடுகளை நாம் கண்டிப்பதுடன் இவ் விடயத்தில் விழிப்பாக இருக்கும்படி வாக்காள மக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்- என்றுள்ளது. (1)

யாழ்.அரசடிப்பிரதேச மக்களின் அபிவிருத்தி தொடர்பாக அந்தப் பகுதி மக்களுடன் மின்சக்தி அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே கலந்துரையாடிய போது எடுக்கப்பட்ட படம்

நவாலி மயானப் பகுதியில் வைத்து ஆயுத முனையில் இரு மோட்டார் சைக்கிள்கள் புதனன்று அபகரிப்பு

வலி.வடக்கு, ஒக.1

இரவு நேரம் நவாலி வழுக்கையாறு இந்துமயானப் பகுதியில் வைத்து இனந் தெரியாத ஆயுததாரிகளால் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் பறித்துச் செல்லப் பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை இரவு 8 மணியளவில் நவாலி- வட்டுக்கோட்டை வீதியில் பயணித்துக் கொண்டிருந்த இரண்டு மோட்டார் சைக்கிள்களே வாள்கள் மற்றும் துப்பாக்கி போன்ற ஆயுதங்களுடன் நின்றவர்களால் பறித்துச்செல்லப்பட்டுள்ளதாக மானிப்பாய் பொலிஸ் நிலையத் தில் முறையிடப் பட்டுள்ளது.

இரவு நேரம் வீட்டுக்கு சென்று கொண்டிருந்த இரண்டு மோட்டார் சைக்கிளின் உரிமையாளர்களும் குறிப்பிட்ட வீதி வழியாக சென்றுகொண்டு இருக்கும் போது நடு வீதியில் நின்ற நான்கு பேர் மோட்டார் சைக்கிள்களை மறித்தனர்.

தொடர்ந்து இவர்கள் மயானத்தின் பிரேதம் எரிக்கும் இடத்துக்கு கொண்டு சென்று அங்கு வைத்து கொலை செய்யப் போவதாக கூறி மோட்டார் சைக்கிள்களை பறித்துச் சென்றதாகவும் தெரிவிக்கப்ப ட்டுள்ளது.

மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள். (1-86)

முகாம்களில் உள்ளவர்களின் மீள்குடியமர்வு; கொழும்பில் இருந்து இரு அதிகாரிகள் யாழ்.வருகை

யாழ்ப்பாணம், ஒக.1

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள தமது உறவினர்களை விடுவிக்கக் கோரி பொதுமக்களால் வழங்கப்பட்டுள்ள விண்ணப்பங்களை பரிசீலணை செய்வதற்காக இரண்டு அதிகாரிகள் கொழும்பில் இருந்து வருகைதந்துள்ளனர்.

வடக்கின் அபிவிருத்திச் செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷவின் விசேட உத்தரவின் பேரில் அத்துல ராஜபக்ஷ, திப்புலமுனி ஆகியோரே நேற்று யாழ். வருகைதந்தாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கட்சியின் மாநகரசபை வேட்பாளர் ஆர்.இரத்தினேஸ்வரன் உதயனுக்கு தெரிவித்தார்.

இது தொடர்பாக வேட்பாளர் இரத்தினேஸ்வரன் தெரிவித்ததாவது:

வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள தமது உறவினர்களை விடுவிக்குமாறு 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விண்ணப்பங்களை எனது அரசியல் அலுவலகத்தில் பொதுமக்கள் கையளித்துள்ளனர்.

அத்தகைய விண்ணப்பங்களை பரிசீலனை செய்து முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள பொதுமக்களை விடுவிப்பதற்கான நடவடிக்கை எடுப்பதாக பசில் ராஜபக்ஷ என்னிடம் உறுதியளித்துள்ளார்.

எனது அரசியல் கட்சி அலுவலகத்தில் விண்ணப்பங்கள் யாவும் இலவசமாக வழங்கப்படுகின்றன. அதனை சிலர் வெளியிடங்களிற்கு கொண்டு சென்று விற்பனை செய்வதாக நாம் அறிகின்றோம்.

எனவே எனது கட்சி அலுவலகத் திற்கு வந்து அத் தகைய விண்ணப் பங்களை இலவசமாக பெற்று பூர்த்தி செய்து எம்மிடம் கையளிக்குமாறு பொது மக்களிடம் கேட்டுக் கொள்கின்றேன் - என்றார் அவர். (1-9)

வெளிநாட்டில் வாழும் தமிழ் மக்கள் நல்லூர்க் கந்தனைத் தரிசிக்க விசேட வசதி

அரசு செய்துள்ளதாக அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக.1

உலகளாவிய ரீதியில் பரந்து வாழும் தமிழ் மக்கள் தமது குடும்ப சகிதம் நல்லூர்க் கந்தனை தரிசிக்க ஒரு வாய்ப்பினை சுற்றுலாத்துறை ஏற்பாடு செய்து கொடுத்துள்ளது.

சுற்றுலாத்துறை அமைச்சர் பைசர் முஸ்தபா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவரது அமைச்சு இது தொடர்பாக விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

சரித்திரப் புகழ்பெற்ற நல்லூர் கோயில் உற்சவம் இவ் வருடம் மிக விமரிசையாக கொண்டாடப்பட இருக்கிறது. ஸ்ரீலங்கா சுற்றுலாத்துறை ஸ்ரீலங்கா விமானப் படையுடன் இணைந்து யாழ்.நகருக்கு விசேட விமான சேவை ஒன்றினை அறிமுகப் படுத்துகின்றது. ஆயிரக்கணக்கான இந்து பக்தர்கள் வருடாந்த நல்லூர் கந்தசுவாமி கோயில் உற்சவம் இடம்பெறும் ஜூலை 27 முதல் ஓகஸ்ட் 20 வரையிலான காலகட்டத்தில் வருகை தர காத்திருக்கிறார்கள்.

சமாதானத்தினை எமது நாட்டுக்கு வழங்கிய இவ் வருட உற்சவம் மிக விமரிசையாகக் கொண்டாடப்படவிருக்கிறது. ஸ்ரீலங்கா சுற்றுலாத்துறை மத மற்றும் கலாசார சுற்றுலாக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றது. அந்த அடிப்படையில் உலகளாவிய ரீதியில் பரந்து வாழும் தமிழ் மக்களை தமது குடும்ப சகிதமாக நல்லூர் கந்தனை தரிசிக்க ஒரு வாய்ப்பினை ஏற்படுத்தி கொடுக்கின்றது. சுற்றுலாத்துறை அபிவிருத்தி அமைச்சர் பைசர் முஸ்தபா தனது குழுவினருடன் கடந்த வாரம் யாழ்.நகருக்கு விஜயம் செய்து இந்த உற்சவத்துக்கு முன்னர் சுற்றுலா மற்றும் ஹோட்டல் துறை வளர்ச்சி பற்றிய பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டார்.

ஸ்ரீ லங்காவில் பயங்கரவாதத்தினை முற்றாக அழித்த பின்னர் இந்து பக்தர்கள் எவ்வித தடைகளும் இன்றி தமது வழிபாட்டினை மேற்கொள்ள இருப்பதாக சுற்றுலாத்துறை அபிவிருத்தி அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

சுதந்திரமான முறையில் இந்து பக்தர்கள் வழிபாட்டினை மேற்கொள்வது மாத்திரமன்றி அவர்களுக்கான வசதிகள் யாவற்றையும் செய்துகொடுப்பதற்கான சகல ஆக்கபூர்வமான முயற்சிகளையும் அரசாங்கம் மேற்கொண்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்காவின் சுற்றுலாத்துறை ஸ்ரீலங்கா விமானப் படையினரின் வர்த்தகக் கிளையான ஹெலி டூர்ஸூடன் இணைந்து இந்த உற்சவகாலத்தில் பக்தர்களுக்கான விசேட விமான சேவையை வழங்குகின்றது.

யாழ்ப்பாண சமூகத்தினரின் மத வழிபாட்டின் முக்கிய அம்சமாக இந்த நல்லூர் உற்சவம் திகழ்ந்து வந்திருக்கிறது. அலங்காரக் கந்தன் எனவும் அழைக்கப்படும் இந்த நல்லூர் குமரன் பக்தர்களுக்கு என்றும் அருள் பாலிப்பவராக திகழ்ந்து வந்திருக்கிறார்.

இந்த நல்லூர் குமரன் உற்சவம் ஜூலை 27 முதல் ஓகஸ்ட் 20 வரையான காலகட்டத்தில் 25 நாள்களுக்கு நடைபெறும். கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கும் இத் திருவிழா மஞ்சம், கைலாய வாகனம், ஒருமுகத் திருவிழா, சப்பறத்திருவிழா, தேர், தீர்த்தம் ஆகியவற்றைத் தொடர்ந்து திருக்கல்யாணத்தில் நிறைவுபெறும் - என்றுள்ளது. (1)

ஜா - எல பகுதியில் நேற்று ரயில் மோதி இருவர் பலி

ஜா - எல பகுதியில் பாதுகாப்பற்ற ரயில் கடவை ஒன்றில் நேற்று இடம்பெற்ற ரயில் விபத்தில் இருவர் கொல்லப்பட்டனர்.

ஜா - எல கனுவான பகுதியில், நேற்று நண்பகல் 12.30 மணியளவில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

புத்தளத்திலிருந்து கொழும்பை நோக்கி வந்துகொண்டிருந்த ரயில் பாதுகாப்பற்ற ரயில் கடவையில் மோட்டார் சைக்கிளில் வந்தவர்களை மோதியுள்ளது.

இதன்போது மோட்டார்சைக்கிளில் சென்ற இருவரும் அந்த இடத்திலேயே உடல் சிதறிப் பலியாகியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாணயநிதியத்தின் நிபந்தனையை ஏற்றதால் மக்கள் மீது அதிக பொருளாதாரச் சுமைகள்

விவரங்களை வெளியிட்டது ஜே.வி.பி.

கொழும்பு, ஓக. 01

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்ட அரசு, மக்கள் மீது பொருளாதாரக் கெடுபிடிகளை விதிக்கத் திட்டமிட்டுள்ளது - என்று ஜே.வி.பி. குற்றம் சுமத்தியுள்ளது.

உலகப் பொருளாதார நெருக்கடி மோசமான நிலையை அடைந்து கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் ரூபாவின் பெறுமதியை வலுப்படுத்த வேண்டியது மிகவும் இன்றியமையாதது என ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை அரசு வழங்கிய உறுதி மொழிகளின் காரணமாக நாட்டு மக்களே அதிக பொருளாதாரச் சுமைகளைச் சுமக்க நேரிட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெற்றுக் கொண்டமையை ஓர் மிகப் பெரிய வெற்றியாக அரச அமைச்சர்கள் கருதிய போதிலும், அதன் விளைவுகள் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும்.

அரசால் வழங்கப்பட்ட உறுதி மொழிகளுக்காகவே கடன் தொகை 190 கோடியிலிருந்து 260 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது - என்றார்.

சர்வதேச நாணய நிதியத்திடம் 260 கோடி அமெரிக்க டொலர்களைக் கடனாகப் பெற்றுக் கொள்வதற்காக அரசு இணங்கிய நிபந்தனைகளையும் ஜே.வி.பி. வெளியிட்டுள்ளது.

அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய, மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ஆகியோரின் கையெழுத்தில், சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளருக்கு அனுப்பிய இணக்கம் தெரிவிக்கும் கடிதத்தை சுனில் ஹந்துன் நெத்தி ஊடகவியலாளர்களிடம் கையளித்தார்.

சமுர்த்தி நிவாரணம், மக்களுக்கு வழங்கும் இலவசக் கொடுப்பனவுகள், உர மானியம், சுகாதார மானியம் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான சீரூடை மானியங்களை ரத்துச் செய்யவும் அரசு, சர்வதேச நாணய நிதியத்திடம் இணக்கம் வெளியிட்டுள்ளது எனவும் சுனில் ஹந்துன் நெத்தி மேலும் கூறினார்.

2011 ஆம் ஆண்டு மொத்த தேசிய உற்பத்தியில் குறைந்தது 2 வீதம் வரியாக அறவிட அரசு, சர்வதேச நாணய நிதியத்திடம் இணக்கம் வெளியிட்டுள்ளது.

இதனால் 2010 ஆம் ஆண்டு மொத்த தேசிய உற்பத்தியில் 1380 கோடி ரூபா வரி வருமானமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதேவேளை அரசின் செலவுகளைக் குறைக்கவும் அரசு இணங்கியுள்ளது. இதனடிப்படையில் இலங்கை மின்சார சபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம், உள்ளிட்ட அரச நிறுவனங்கள் அரச மானியத்தின் கீழ்ச் செயற்பட மாட்டாது எனவும் இந்த நிறுவனங்களை 2011 ஆம் ஆண்டில் நஷ்டமடையாத நிலைமைக்குக் கொண்டுவர வேண்டும் என்ற நிபந்தனையை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது எனவும் சுனில் ஹந்துன் நெத்தி குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான சில நிறுவனங்களை தனியார்மயப்படுத்துவதே இதன் நோக்கம் எனவும் அவர் கூறியுள்ளார். (அ-சி)

மியான்மர் மீதான தடையை அமெரிக்க அரசு மேலும் நீடிப்பு

மியான்மருக்கு எதிரான தனது பொருளாதாரத் தடையை அமெரிக்கா நீடித்துள்ளது. மியான்மரில் நீண்டகாலமாக இராணுவ ஆட்சி நடந்து வருகிறது. அங்கு ஆங் சான் சூகி ஜனநாயக ஆட்சியை கொண்டு வருவதற்காக போராட்டம் நடத்தி வருகிறார். இதனால் மியான்மர் அரசு அவரை வீட்டுக் காவலில் அடைத்து வைத்துள்ளது.

தென்னாபிரிக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொழில்நுட்பப் பயிற்சிப் பிரதி அமைச்சர் பெ.இராதாகிருஷ்ணனிடம் முறைப்பாடு செய்துள்ளார் என அவரது ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளவத்தை கானல் வீதியைச் சேர்ந்த தங்கவேல் தினேஷ் (வயது - 22) என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த 2007 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட தினேஷ் ஏஜன்ஸி மூலமாக வெளிநாடு செல்வதற்கு முயற்சித்து குறிப்பிட்ட ஏஜன்ஸி மூலமாக தென் ஆபிரிக்காவுக்குச் சென்றார் எனவும் அங்கு கைவிடப்பட்ட நிலையில் இரண்டு வருடங்களின் பின்னர் தென் ஆபிரிக்கா குடிவரவு - குடியகல்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

தினேஷை ஆபிரிக்க அதிகாரி ஒருவரே நேரில் அழைத்து வந்து கட்டுநாயக்க விமான நிலையத்தில் குடிவரவு - குடியகல்வு அதிகாரிகளிடம் ஒப்படைத்தார் எனவும் அதன் பின்னரே அவர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. - என்று மேலும் கூறப்பட்டுள்ளது. (சி)

கருத்தரங்கு
தமிழ் திரு.குழந்தை
03/08/2009, 04.08.2009
காலை 9 மணி
எதிர்பார்க்கை வினா, விடை.
வெளி மாணவருக்கும் அனுமதி.
யூனிவேர்சல் யா/இந்து மகளிர் கல்லூரி அருகே.

நாணயநிதியம் கடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கு ஒருவேளை சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவிகள் கிடைக்காமல் விட்டிருந்தால், இலங்கையின் நட்பு நாடுகள் நிச்சயம்இலங்கைக்குத் தேவையான நிதியுதவிகளை வழங்கியிருக்கும். இலங்கையுடன் இருதரப்பு உறவுகளையும், நட்பையும் பேணிவரும் நாடுகள் இலங்கையைக் கைவிட்டிருக்காது.

இலங்கை அரசு, ஜனாதிபதி, இலங்கையின் மத்திய வங்கி ஆளுநர் ஆகியோர் மீது இலங்கையின் நட்பு நாடுகளுக்கு மிகுந்த மரியாதையும் நன்மதிப்பும் நம்பிக்கையும் உண்டு. இவர்கள் ஒரு தொலைபேசி அழைப்பு விடுத்திருந்தாலே போதும். நட்பு நாடுகளின் நிதி உதவிகள் இலங்கைக்கு நிச்சயம் கிடைக்கப்பெற்றிருக்கும்.

இலங்கையின் பலத்தைக் காட்டுகிறது

சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவிகளுக்குத் தடையாக இருப்பதில்லை என்று முன்பெல்லாம் உறுதி தந்துவிட்டு சில நாடுகள் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான 260 கோடி டொலர் கடனுதவிகளை அங்கீகரிப்பதற்கான வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமல் இலங்கையைக் கைவிட்டிருக்கின்றன. இந்நாடுகளின் ஆதரவற்ற சூழ்நிலையிலேயே இலங்கைக்கு நாணய நிதியத்தின் கடனுதவிகள் கிடைக்கப்பெற்றுள்ளமை வெளிப்படையானதாகும். சில நாடுகளின் ஆதரவற்ற சூழ்நிலையிலும் சர்வதேச நாணயநிதியத்தின் 260 கோடி டொலர் கடனுதவிகளை இலங்கை பெற்றுக் கொண்டுள்ளமை இலங்கையின் பலத் தைக் காட்டுவதாகவே உள்ளது என்று தனிப்பட்ட ரீதியாக (சர்வதேச நாணய நிதியத்துக்கான இந்தியப் பிரதிநிதி என்ற வகையில் இல்லாமல்) சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தற்போது இலங்கையில் அமைதி நிலவுகின்றது. இலங்கை படிப்படியாக நெருக்கடிகளிலிருந்து மீண்டு வழமைக்குத் திரும்புகின்றது. எனவே, சர்வதேச தொழிலதிபர்களும், முதலீட்டாளர்களும் இலங்கையில் முதலீடு செய்வதற்குப் பயப்படத் தேவையில்லை என்பது சர்வதேச நாணய நிதியத்தால் சொல்லாமல் சொல்லப்பட்டிருக்கும் செய்தி ஆகும். சர்வதேச வெளிநாட்டு முதலீடுகள் இலங்கைக்கு நேரடியாக மேற்கொள்ளப்படுவதற்கு உகந்த சூழல் தொடர்ந்தும் பேணப்பட வேண்டும். - என்றார். (அ-சி)

தனியார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர், இவ்விடயத்தில் சகல போக்குவரத்துச் சங்கங்களும் ஆணைக்குழுவுக்கு எழுத்து மூலமான வேண்டுகோளை அனுப்ப வேண்டும் எனவும் தெரிவித்தார்.

2009 ஆம் ஆண்டுக்கான கட்டண மீளாய்வு ஓகஸ்ட் 15 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரவேண்டும் எனவும், நடைமுறையிலுள்ள கட்டணங்கள் 7 வீதத்தால் அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் ஆணைக்குழுவிடம் வேண்டுகோள் விடுத்திருக்கின்றது எனத் தெரிவித்த பேராசிரியர் அமல் குமாரகே, 7 வீத கட்டண உயர்வை அனுமதிக்க முடியாது எனவும் கூறினார்.

கடந்த ஜூன் 18 ஆம் திகதி போக்குவரத்து அமைச்சர் டலஸ் அழகப்பெருமவின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இவ்வருடத்துக்கான கட்டண மீளாய்வு ஜூலை முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரவேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

பஸ் கட்டண உயர்வுக்கு அனுமதி அளிக்க வேண்டிய உரிமை போக்குவரத்து அமைச்சுக்கும், போக்குவரத்து ஆணைக்குழுவுக்கும் மட்டுமே உரித்தானது எனவும் அவர் சொன்னார். (அ-சி)

Arts Academy யின் A/L இறுதிக்கருத்தரங்கு
வரும் ஞாயிறு: 1.00 - 4.00
இடநெருக்கடியை தவிர்க்க 11 மணி முதல் அனுமதி பெறலாம்.
Science Hall
கன்னாதிட்டி, யாழ்.

நாணய நிதியத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடன்படவில்லை என்பதை மிகவும் பொறுப்புடன் கூறிக்கொள்கிறோம்.

எம்மால் நாணய நிதியத்திற்கு விளக்கிக் கூறப்பட்ட எதிர்கால அபிவிருத்தி மற்றும் பொருளாதாரத் திட்டங்களை அடிப்படையாக வைத்தே எமக்கு நாணய நிதியம் நிதியைத் தந்தது. இந்த இணக்கப்பாட்டைத் தவிர எந்த நிபந்தனையும் இல்லை.

நாம் மக்களுக்கான நிவாரணத்தை வெட்டவோ அல்லது அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தவோ இணங்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில்தான் இவ்வாறான செயல்கள் இடம்பெற்றன. இத்தகைய நிபந்தனைகளுக்கு உடன்பட்டுத்தான் ஐக்கிய தேசியக் கட்சி சர்வதேச நிதி நிறுவனத்திடமிருந்து கடன் உதவியைப் பெற்றது.

சர்வதேச நாணய நிதியம் அரசுக்கு கடன் வழங்காது என்று கூறியவர்கள் தான் இவ்வாறான பொய்க்குற்றச்சாட்டுகளைச் சுமத்தி வருகின்றனர். - என்றார். (அ-சி)

44.7 வீதமானோர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாநகரசபை தேர்தல் பிரசாரங்களில் 79.3 சதவீதமானோர் அக்கறையின்றி காணப்பட்டனர் எனவும், இம்மாநகர சபைத் தேர்தல் தொடர்பாக 60.7 சதவீதமானோர் உறவினர்கள் நண்பர்கள் உட்பட ஏனையோருடன் உரையாடுவதில்லை எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வாக்களிப்போரில் தனிப்பட்ட நலன்களை பெறுவதற்காக சுமார் 27.5 வீதமானோர் வேட்பாளர்களுக்கு வாக்களிப்பார்களெனவும்சமூகநன்மையை கருத்தில்கொண்டு செயற்படும் வேட்பாளருக்கு 51.7 சதவீதமானோர் வாக்களிப்பர் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

* மொத்த வாக்காளர்களில் 71.8 வீதத்தினரே மாநகர சபை எல்லைக்குள் இப்போது வசிக்கின்றனர். 11.6 வீதமானோர் புதிதாக (அண்மையில்) அமைக்கப்பட்ட அகதிமுகாம்களில் வசிக்கின்றனர். 20.9 வீதமானோர் நாட்டின் ஏனைய பகுதிகளில் வசிக்கின்றனர்.
* இந்தத் தேர்தலில் எந்தக் கட்சிக்கு வெற்றி கிடைக்கும் என்று நிச்சயமாகச் சொல்லமுடியாது அல்லது தெரியாது என்று 47.3 வீதமானோர் கூறினர். 14.8 வீதமானோர் பதில் கூற மறுத்துவிட்டனர்.
* கட்சிக் கூட்டங்கள் அல்லது கலந்துரையாடல்களில் (கருத்துக் கணிப்பு பெறப்பட்டதுவரை) 79.3 வீதத்தினர் பங்குபற்ற வில்லை. 19 வீதத்தினரே கலந்துகொண்டனர்.
* ஒரு வருடத்துக்கு முந்திய பொருளாதார நிலையுடன் ஒப்பிடும் போது இப்போது எந்தவித மாற்றமும் இல்லை என்று 38.3வீதமானோரும் சிறிதளவு முன்னேற்றம் காணப்படுவதாக 24.9 வீதத்தினரும் தெரிவித்தனர். (அ)

வவுனியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

11,960 குடும்பங்களைச் சேர்ந்தவர்களே யாழ்ப்பாணம் அழைத்து வரப்பட்டு தமது உறவினர்களிடம்ஒப்படைக்கப்பட இருப்பதாக அதே வட்டாரங்கள் விவரித்தன.

இவர்கள் 5 ஆம் 6 ஆம் 7 ஆம் திகதிகளில் வாகனங்கள் மூலம் ஏ-9 வீதியூடாக அழைத்துவரப்படுவார்கள். குறிப்பிட்ட ஓரிடத்தில் வைத்து அவர்கள் உறவினர்களிடம் கையளிக்கப்படுவர் என்று அமைச்சருக்கு நெருங்கியவட்டாரங்கள் மேலும் தகவல் வெளியிட்டன.

சமூக சேவைகள் அமைச்சு நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தற்காலிகமாகத் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களது நலன்கள் தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடியதைத் தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அந்த மக்களை சொந்த இருப்பிடங்களுக்கு அனுப்பி வைப்பதற்கும் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துவதற்குமான ஏற்பாடுகளையும் செய்து வருகின்றார்.

இதன் முதற்கட்டமாக யாழ் மாவட்டத்திலுள்ள நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த ஆயிரத்து 141 குடும்பங்கள் தங்களது சொந்த இருப்பிடங்களுக்கு அனுப்பப்படவுள்ளன.

இதே நேரம் வவுனியா மாவட்டத்திலுள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த மக்களை வந்து பொறுப்பேற்குமாறு ஜனாதிபதி தெரிவித்துள்ள தகவலை நேற்றுக்காலை ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பசில் ராஜபக்ஷ தொலைபேசி மூலம் தெரிவித்தார். அதனையடுத்து வவுனியா நலன்புரி நிலையங்களிலுள்ள 11 ஆயிரத்து 960 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 40 ஆயிரம் யாழ் மாவட்ட மக்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அடுத்தவாரம் முதல் பொறுப்பேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும் என்றுள்ளது. (அ-1)

மீண்டும் விற்பனையில்

135CC டிஸ்கவரி - நீலம் / சிவப்பு
188CC பல்சர் - சிவப்பு / கறுப்பு
200CC பல்சர் - சிவப்பு / கறுப்பு

S.J. மோட்டோர்ஸ்
164, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.:021 222 7566.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.08.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.